தினமணி

# வருமானம் தாராளம்; பிரச்னைகளோ ஏராளம்!: மஞ்சள் விவசாயிகள் வேதனை

First Published : 19 May 2010 02:12:05 AM IST

Last Updated : 19 May 2010 06:05:23 AM IST



ஈரோடு : மதிப்பு கூட்டத்தக்க மஞ்சள் பொருள்களை உருவாக்குவதன் மூலம் மஞ்சள் விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்த அரசு உதவ வேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கை செவிசாய்க்கப்படாமலேயே இருக்கிறது.

சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த சந்தையாக ஈரோடு விளங்குகிறது. இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் மஞ்சள் விளைந்தாலும், ஆண்டு முழுவதும் விற்பனை நடைபெறும் பிரதான சந்தையாக ஈரோடு மட்டுமே விளங்குகிறது. பெரும்பாலும் உணவுப் பொருளாகவே பயன்படுத்தப்படும் மஞ்சள் வர்த்தகம் மூலம் அரசுக்கு கோடிக்கணக்கில் வருவாய் கிடைக்கிறது.

ஈரோடு மாவட்டத்தைப் பொருத்தவரை நெல், கரும்புக்கு அடுத்தபடியாக மஞ்சள் பயிர் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சுமார் 15 ஆயிரம் ஹெக்டேரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு, தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனைக் கூடங்கள் மூலம், ஏல முறையில் மஞ்சள் விற்பனை நடைபெறுகிறது.

கடந்த 2008-ல் ஒரு குவிண்டால் மஞ்சளின் விலை ரூ,4,600 ஆக இருந்தது. கட்டுப்படியான விலை கிடைக்காததால், பல விவசாயிகள் மஞ்சள் சாகுபடியைக் கைவிட்டனர். ஆனால் மஞ்சளின் விலை தொடர்ந்து அதிகரித்து, கடந்த ஆண்டில் ரூ.13,500-க்கு உயர்ந்தது. நடப்பாண்டின் துவக்கத்தில் மஞ்சள் விலை சற்றுக் குறைந்தாலும், பின்னர் படிப்படியாக விலை உயர்ந்தது. இதன் காரமணமாக மஞ்சள் சாகுபடிப் பரப்பு அதிகரித்துள்ளது.

ஆன்லைன் வர்த்தகத்தில் மஞ்சள் இடம் பெற்றிருப்பதால், மஞ்சளின் விலை தாறுமாறாக உயர்வதும், குறைவதுமாக உள்ளது. விலை உயர்வு நிரந்தரமல்ல என்று விவசாயிகளும், வர்த்தகர்களும் கருதுவதால், எப்போது மஞ்சளை விற்பது என்று குழப்பமான நிலையிலேயேதான் உள்ளனர். எனவே மஞ்சளுக்கு நிரந்தரமான விலையை நிர்ணயிக்க வேண்டும் என்றே அனைத்துத் தரப்பினரும் கருதுகின்றனர். மஞ்சள் விலை கடுமையாக உயர்ந்தாலும், ஆன்லைன் மூலம் மஞ்சள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களே பெரிதும் பயனடையும் நிலை உள்ளது.

ஈரோட்டில் ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகத்தை உருவாக்க வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையும் இன்னும் கனவாகவே உள்ளது. இதற்காக மஞ்சள் வணிகர்கள் ரூ.2 கோடி திரட்டி, ஈரோடு வில்லரசம்பட்டியில் 50 ஏக்கர் நிலத்தை வாங்கினர். அங்கு 2005-ல் ரூ.33 கோடி மதிப்பீட்டில் மஞ்சள் வணிக வளாகம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் அந்த இடம் போதுமானதாக இல்லாததால், அங்கு மஞ்சள் வணிக வளாகம் கட்ட முடியாது

என பின்னர் அரசு தெரிவித்துவிட்டது. மீண்டும் புதிய இடம் தேர்வு செய்து, மஞ்சள் விவசாயிகள், வர்த்தகர்களின் 10 ஆண்டுகாலப் போராட்டத்திற்கு முடிவு காண அரசு முன்வர வேண்டும்.
மஞ்சளை நேரடியாக விற்பனை செய்வதைவிட, மதிப்பு கூட்டத்தக்க பொருள்களாக மாற்றி விற்பனை செய்தால் விவசாயிகளுக்கு பெரிதும் உதவியாக இருக்கும். எனவே மஞ்சளில் இருந்து மருந்துப் பொருள்கள் மற்றும் பெயின்ட் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் துவக்கினால், விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக இருப்பதுடன், ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். இதேபோல் மஞ்சள் ஆய்வு மையத்தை நிறுவி, வீரியமிக்க விதைகளைக் கண்டறிந்து பயிர் சாகுபடி மேம்பாட்டுக்கு உதவ வேண்டும் என்பதும் விவசாயிகளின் கோரிக்கையாகும்.

**"நீர்நிலைகள் மாசுபடுவதை தடுக்க வேண்டும்'**

First Published : 18 May 2010 10:25:44 AM IST

கோவை, மே 16: கோவையில் உள்ள நீர்நிலைகள் மாசுபடுவதைத் தடுக்க வேண்டும் என தொண்டாமுத்தூர் எம்எல்ஏ என்.எம்.கந்தசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் "நாட்டை திருத்த நம்மால் முடியும்' என்ற தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இவ் விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற என்.எம்.கந்தசாமி, நூலை வெளியிட்டார். அவர் பேசியது:
கோவையில் உள்ள நீர் வளத்தை பாதுகாக்க வேண்டியது அனைவரது கடமை. சில குளங்களிலும், ஏரிகளிலும் சாயக் கழிவுகள் கலக்கப்படுவதாகப் புகார் எழுந்துள்ளது. இதனால், நீர் வளம் முழுவதும் கடும் பாதிப்புக்குள்ளாகிவிட்டது. இந்த நீர் பாயும் விளை நிலங்களும் ரசாயனப் பொருள்களால் மாசுபடுகிறது.
இதனால், விவசாயம் அடியோடு அழிந்து போகும் நிலை உருவாகியுள்ளது. நீர் நிலைகளை மாசுபடுத்தும் கழிவு நீர் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நீர் நிலைகள் மாசுபடுவதை தடுக்க தேவையான முயற்சியில் அனைவரும் ஈடுபட வேண்டும்.
தற்போது மின் பற்றாக்குறை பெரிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது. இப் பிரச்னையை சமாளிக்க மரபுசாரா எரிசக்தித் துறையை மேம்படுத்தும் முயற்சியில் விஞ்ஞானிகளும், மாநில அரசும் ஈடுபட வேண்டும். ஈரோட்டில் உள்ள ஒரு கல்லூரி மாணவர்கள், விவசாய கழிவுகளில் இருந்து மின்சாரம் தயார் செய்யும் முறையை கண்டறிந்துள்ளனர். இத்தகைய ஆக்கப்பூர்வமான ஆய்வுகளில் மாணவர்களும், விஞ்ஞானிகளும் ஈடுபட வேண்டும். மரபுசாரா எரிசக்தி துறையில் ஆய்வில் ஈடுபடும் மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் முயற்சியில் மத்திய, மாநில அரசுகள் ஈடுபட வேண்டும். சில நிறுவனங்கள் மின்சார திருட்டில் ஈடுபடுவதாகப் புகார்கள் வருகின்றன. இத்தகைய நிறுவனங்களை இனம்காண வேண்டியது மின்சார வாரியத்தின் கடமை. மின் திருட்டில் ஈடுபடும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தாலே மின்பற்றாக்குறை பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் என்றார்.
வேளாண் பல்கலை. பதிவாளர் சுப்பையன், ஆராய்ச்சி இயக்குநர் மு.பரமாத்மா, நூல் ஆசிரியர் பு.பெ.ராமசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

**தோட்டக்கலைத் திட்டங்களுக்கு ரூ. 4 கோடி ஒதுக்கீடு: அதிகாரி**

First Published : 18 May 2010 09:36:22 AM IST

சிவகங்கை, மே 17: தோட்டக்கலை பயிர் உற்பத்திக்கான மானியத்தொகை உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக ரூ.4.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என சிவகங்கை மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் எஸ். இருளப்பன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மத்திய, மாநில அரசுகள் உதவியுடன் தோட்டக்கலை இயக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சென்ற ஆண்டு வழங்கப்பட்ட தொகையை விட இந்த ஆண்டு ஒவ்வொரு இனத்துக்கும் விவசாயிகளுக்கு கூடுதல் தொகை மானியம் வழங்கப்பட உள்ளது.

திசுவாழை சாகுபடி: ஒரு ஹெக்டேருக்கு ரூ.37,500 வீதம் 100 ஹெக்டேருக்கு திசுவாழைக்கன்றுகள் மற்றும் இடுபொருள்கள் வழங்கப்பட உள்ளது.

மா-அடர் நடவு சாகுபடி: 5 மீட்டர் இடைவெளியில் ஹெக்டேருக்கு  400 மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க 3 ஆண்டுகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

மா- இயல்பான இடைவெளியில் சாகுபடி:

வழக்கமான இடைவெளியில் 300 நடப்படும் மா சாகுபடிக்கு முதல் ஆண்டுக்கு ஹெக்டேருக்கு ரூ.9900 வீதம் 300 ஹெக்டேர் பரப்புக்கு வழங்கப்படும்.

முந்திரி சாகுபடி: ஒரு ஹெக்டேருக்கு ரூ.12,000 மானியத்தில் 350 ஹெக்டேர் முந்திரி சாகுபடி பரப்பு விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. பராமரிப்பு மானி.யம்: ஏற்கெனவே நடவு செய்யப்பட்ட பழக்கன்றுகளுக்கு இரண்டாம் ஆண்டு 3-ம் ஆண்டுகளில் ஒரு ஹெக்டேர் மாமரத்துக்கு ரூ.4,500 மற்றும் 6,750. முந்திரி பயிருக்கு ரூ.2,250 மற்றும் 3,375.

ஒருங்கிணைந்த உரம் மற்றும் பயிர்பாதுகாப்பு: ஹெக்டேருக்கு ரூ.1,000 மானியத்தில் 100 ஹெக்டேர் பரப்பில் செயல் விளக்கம் அமைக்கப்படும்.

மண்புழு உரம் தயாரிப்பு கூடங்கள் அமைக்க ரூ.85,000 மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பண்ணைக் கருவிகள் மற்றும் பயிர்பாதுகாப்பு கருவிகள்: விசை மூலம் செயல்படும் பண்ணைக் கருவிகள் மற்றும் பயிர்பாதுகாப்பு கருவிகள் 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்படும். இதற்கென ரூ.17.5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குப் பயிற்சி: மாவட்டத்தைச் சேர்ந்த 500 விவசாயிகள் தோட்டக்கலை சாகுபடியில் முன்னோடி பகுதிகளுக்கு அழைத்து செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப்படுவர்.

கிராமப்புற சந்தை மேம்பாடு: கிராமப்புறங்களில் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி பொருள்களை விற்பனை செய்ய உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக ரூ. 8 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.  இது உள்ளாட்சி மன்றங்கள் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டத்துக்கு இந்த ஆண்டு ரூ.4.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டங்களில் பயனடைய விரும்பும் விவசாயிகள் அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களிடம் முன்பதிவு செய்து பயனடைய கேட்டுக்கொள்ளபபடுகின்றனர் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தொடங்கியது மத்திமீன் சீசன்**

First Published : 19 May 2010 12:00:00 AM IST

புதுச்சேரி தேங்காய்திட்டு பகுதி மீனவர்கள் வலையில் அதிக அளவில் சிக்கிய மத்தி மீன்கள்.

காரைக்கால், மே 18: புதுவை மற்றும் காரைக்காலில் மத்தி மீன்கள் சீசன் தொடங்கியுள்ளது. வெளிமாநிலங்களுக்கு அனுப்ப வழியில்லாத காரணத்தால், மத்தி மீன்களை கருவாடாக்கும் பணியில் மீனவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடல் மீன்களில் மிக குறுகிய தொலைவிலேயே அதிகளவில் கிடைப்பதில் மத்தி மீன்கள் முதன்மை வகிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் தமிழகம், புதுவை கடல் பகுதியில் மே மாதத்தில் தொடங்கி, ஆகஸ்ட் மாதம் வரை மத்தி மீன்கள் சீசன் இருக்கும்.



பொதுவாக, கேரள மாநிலத்தின் கடல் பகுதியில் இந்த மீன்கள் அதிகம் கிடைக்கும். இந்த மீன்கள் அதிக கொழுப்புடனும், எண்ணெய்க்கு பயன்படும் வகையிலும் இருக்கும். இந்த மீன்களை கேரள மக்கள் அதிகம் விரும்பி சாப்பிடுவர். கேரளத்தில் சீசன் முடிந்து, வெளிமாநிலங்களில் இந்த மீன்கள் பிடிக்கப்பட்டாலும், கேரளத்துக்கு அதிகளவில் அனுப்பி வைக்கப்படும்.

கேரளத்தில் தற்போது மழை சீசன் தொடங்கியுள்ளதால், மத்தி மீன்கள் அதிகளவில் கிடைப்பதில்லை. இந்நிலையில், காரைக்கால் மாவட்டத்தில் மத்தி மீன்கள் சீசன் தொடங்கியுள்ளதாக இந்தப் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து காரைக்கால் மீனவர்கள் மேலும் கூறியதாவது:

கடலுக்குள் அரை கிலோ மீட்டர் தொலைவிலேயே அதிகளவிலான மத்தி மீன்கள் கிடைக்கின்றன. இதனால் செலவு குறைவு. சுருக்கு வலை பயன்படுத்த முடியாததால், சாதாரணமாக மீனவர்கள் பயன்படுத்தும் வலையைக் கொண்டு, இந்த மீன்கள் பிடிக்கப்படுகின்றன. ஒரு படகில் ஒரு டன் அளவுக்கும் கூடுதலாக மீன்கள் பிடிக்கப்படுகின்றன. கேரளத்தில் சமீபத்தில்தான் மத்தி மீன்கள் சீசன் முடிந்துள்ளது. இதனால், அங்குள்ள வியாபார நிறுவனத்தினர் இன்னும் காரைக்கால் பகுதிக்கு வரவில்லை. எனவே, தற்போது பிடிக்கப்படும் மத்தி மீன்கள் அனைத்தையும் கருவாடாக்குகிறோம். மேலும், தமிழகம், ஆந்திரத்தில் உள்ள கோழிப் பண்ணைகளுக்கு தீவனமாக்கவும் அனுப்பி வைக்கிறோம்.ஒரு கிலோ மத்தி மீன்கள் ரூ.50 வரை விற்கப்படுகிறது. தற்போது கருவாடாக ஆக்கப்பட்ட பிறகு, ஒரு கிலோ ரூ. 18 வரை விற்பனையாகிறது. கேரளத்துக்கு அனுப்பப்படுவது என்றால் கிலோ ரூ.50 வரையில் விற்கலாம். அதிக லாபம் கிடைக்கும்.

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 10 மீனவ கிராமங்களில் மண்டபத்தூர் கிராம மீனவர்கள் மட்டுமே மத்தி மீன்களை பிடிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். வெளிமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்போதுதான் இந்த மீன்கள் மூலம் வருவாய் கிடைக்கும் என்கின்றனர் மீனவர்கள்.

**ஒரு கிலோ மல்லி தழை ரூ. 80**

First Published : 18 May 2010 12:28:08 PM IST

திருச்சி, மே 17: வரத்துக் குறைவு காரணமாக திருச்சி காந்தி மார்க்கெட் பகுதியில் ஒரு கிலோ மல்லி தழை ரூ. 80 முதல் ரூ. 90 வரையிலான விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது நிலவி வரும் கடுமையான கோடையின் காரணமாக காந்தி மார்க்கெட் உள்ளிட்ட பகுதிகளுக்கு வரும் மல்லியின் வரத்து குறைந்ததாலேயே இந்தளவுக்கு அதன் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

பொதுவாகவே மார்க்கெட்டில் காய்கறிகளை வாங்கும் போது இலவசமாக கறி வேப்பிலையுடன் மல்லியும் சேர்த்து கொடுத்து வந்த நிலையில், தற்போதைய விலை உயர்வு காரணமாக வியாபாரிகள் குறைந்தது 100 கிராம் என்றளவிலேயே மல்லி தழையை விற்பனை செய்து வருகின்றனர்.

காந்தி மார்க்கெட்டில் மல்லி தழை கிலோ ரூ. 80 என்ற விலையில் விற்பனை செய்யப்படும் நிலையில், இதர இடங்களில் கிலோ ரூ. 100 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மல்லி தழை போன்றே கேரட் கிலோ ரூ. 30 முதல் ரூ. 40 வரையிலும், பீட்ரூட் கிலோ ரூ. 20 வரையிலும், 20 காலி பிளவர்களைக் கொண்ட பெட்டி ரூ. 400 வரையிலும், தக்காளி ரூ. 15 முதல் ரூ. 20 வரையிலான விலைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதுபோல முருங்கை பீன்ஸ் கிலோ ரூ. 45, அவரைகிலோ ரூ. 48, பீர்க்கங்காய் கிலோ ரூ. 22 என்ற விலைகளிலும் விற்பனை செய்யப்படுகிறது.

வரத்து குறையத் தொடங்கியிருப்பதால் கடந்த 10 நாள்களாக காய்கறிகளின் விலை உயர்ந்து கொண்டே இருக்கிறது என்கின்றனர் காந்தி மார்க்கெட் வியாபாரிகள்.

**திருச்சி மாவட்டத்தில் பால் உற்பத்தி பாதிக்கும் அபாயம்**

First Published : 18 May 2010 12:27:02 PM IST

திருச்சி, மே 17: பாலுக்கான கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி, பால் உற்பத்தியாளர்கள் திங்கள்கிழமை தொடங்கிய பால் நிறுத்தும் போராட்டத்தின் காரணமாக, மாவட்டத்தில் பால் உற்பத்தி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பால் உற்பத்திக்குத் தேவையான கால்நடைத் தீவனங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், பால் கொள்முதல் விலையை அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தி, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தினர் பல்வேறு கட்டப் போராட்டங்களை நடத்தினர்.

இந்தப் போராட்டத்தின் அடுத்தக் கட்டமாக, பால் உற்பத்தி நிறுத்தும் போராட்டம் திங்கள்கிழமை (மே 17) முதல் நடைபெறும் எனவும் அறிவித்திருந்தனர்.

இதன்படி, திருச்சி ஆவினுக்கு அதிகளவில் பால் கொள்முதல் செய்யப்படும் துறையூர் பகுதியில் உள்ள 60 பால் உற்பத்தி சங்கங்கள் மூடப்பட்டன. இதனால், இங்கிருந்து ஆவின் நிறுவனத்துக்கு பால் அனுப்புவது முற்றிலுமாக நின்று போனது.

இதேபோல, முசிறி ஒன்றியத்தின் குறிப்பிட்ட பகுதிகளிலும் பால் உற்பத்தி திங்கள்கிழமை நிறுத்தப்பட்டது.

திங்கள்கிழமையைக் காட்டிலும்செவ்வாய்க்கிழமை மேலும் 20 சத பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் பால் நிறுத்தும் போராட்டத்தில் பங்கேற்கும்.

எனவே, மாவட்டத்தில் பால் உற்பத்தி மட்டுமல்லாது, பால் தட்டுப்பாடும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்கிறார் பால் உற்பத்தியாளர் நலச் சங்கத்தின் மாநில இணைச் செயலர் கணேசன்.

பாதிப்பு இல்லை: பால் உற்பத்தியாளர்களின் பால் நிறுத்தும் போராட்டத்தில் திருச்சி ஆவினுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என்றார் அதன் பொது மேலாளர் விஜீநாதன்.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களிலிருந்து திருச்சி ஆவினுக்கு தினமும் 2.50 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படும். திங்கள்கிழமை வர வேண்டிய பால் கொள்முதலில் 5000 லிட்டர் மட்டுமே குறைந்தது. இதனால் பால் உற்பத்தியிலோ, விநியோகத்திலோ எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**அரசு நிர்ணயித்த விலையை விட கொள்முதல் விலை குறைவு: பாஜக கண்டனம்**

First Published : 18 May 2010 12:58:21 PM IST

அரக்கோணம், மே 17: அரசு நிர்ணயித்த விலையை விட குறைவான விலைக்கு நெல்லை அதிகாரிகள் கொள்முதல் செய்வதாக பாஜக கண்டனம் தெரிவித்துள்ளது.

அரக்கோணத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஒன்றிய பாஜக செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்துக்கு ஒன்றியத் தலைவர் எஸ்.ரமேஷ் தலைமை தாங்கினார்.

அரக்கோணத்தை அடுத்த தக்கோலம், சயன்புரம் நெல் கொள்முதல் மையங்களில் அரசு நிர்ணயித்த விலைக்கும் பாதியாக நெல்லை அதிகாரிகள் கொள்முதல் செய்கின்றனர். தரகர்கள் மூலம் செல்லும் நெல்லுக்கு நல்ல விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதற்கு கண்டனம் தெரிவிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநில விவசாய அணி பொருளாளர் டி.வி.ஆர்.ராகவன், மாவட்ட பொதுச்செயலர் பாபாஸ்பாபு, மாவட்ட தலைவர் ஜி.வி.பிரகாஷ், செயலர் பட்டாபிராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மே 21 -ல் விவசாயிகள் குறைகேட்பு**

First Published : 18 May 2010 12:07:15 PM IST

புதுக்கோட்டை, மே 17:  புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறை கேட்கும் நாள் கூட்டம் மே 21 (வெள்ளிக்கிழமை) காலை 10.30-க்கு மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி தலைமையில் நடைபெறவுள்ளது.


இக்கூட்டத்தில் பல அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளின் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கவுள்ளனர்.

எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள், இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு பயன் பெறலாம்.

**பால் உற்பத்தியாளர் போராட்டம்: ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு வருமா?**

First Published : 19 May 2010 01:11:07 AM IST

Last Updated : 19 May 2010 06:04:40 AM IST




சென்னை, மே 18: பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதரவாக பால் விற்பனை முகவர்களும் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர். இதையடுத்து ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

தமிழகத்தில் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ. 5 முதல் உயர்த்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. இதற்கு ஆதரவாக தமிழ்நாடு பால் முகவர்கள் நலச் சங்கம் போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளன.

சென்னை ஆவின் நிறுவனம் சார்பில் சேலம், தருமபுரி, விழுப்புரம்,வேலூர்,ஈரோடு,திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து தினமும் 23 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

இதில் தமிழகம் முழுவதும் சுமார் 20 லட்சம் லிட்டர் பால் தினமும் விற்பனை செய்யப்படுகிறது.

சென்னையில் மட்டும் தினமும் 10.30 லட்சம் லிட்டர் பால் ஆவின் நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

இதில் சேலம் மாவட்டத்தில் இருந்து மட்டும் ஆவினுக்கு

தினமும் 4.10 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்த நிலையில் பால் உற்பத்தியாளர்கள் வேலைநிறுத்தம் தீவிரம் அடைந்துள்ளதால், பால் கொள்முதல் செய்து, சென்னை ஆவினுக்கு அனுப்பப்படுவது பாதிக்கப்பட்டுள்ளது.

தட்டுப்பாடு வராது- ஆவின்:

இது குறித்து ஆவின் நிறுவன அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

தமிழகத்தில் ஆவின் நிறுவனம் மூலம் பால் விநியோகம் சீராக நடைபெறுகிறது.

பால் உற்பத்தியாளர்கள் போராட்டத்தால் இதுவரை எந்த வித பாதிப்பும் இல்லை. இனியும், ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்படாது.

ஆவின் நிறுவனம் பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் மூலம் 22 லட்சத்து 29 ஆயிரம் பால் உற்பத்தியாளர்கள் வாயிலாக பால் கொள்முதல் செய்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் வேலைநிறுத்தம் காரணமாக 5 சதவீதத்துக்கும் குறைவான பாதிப்பே ஏற்பட்டது.

சென்னை உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் பால் தேவையை ஈடுகட்டவும், தட்டுப்பாடு ஏற்படாமல் வருமுன் காக்கும் வகையிலும் அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் தனி அலுவலர்கள் இடம் பெற்றுள்ள ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, தேவையான பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று கடந்த 1.9.2009-ல் தான் ஒரு லிட்டர் பசும்பாலுக்கு ரூ. 15.54 எனவும், எருமைப் பாலுக்கு ரூ. 23 எனவும் பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்தியது.

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ஒரு லிட்டர் எருமைப்பாலுக்கு ரூ. 10.50-ம், பசும்பாலுக்கு ரூ. 5.50-ம் உயர்த்தப்பட்டுள்ளது.

பால் பவுடர் உற்பத்தி:

இதுதவிர ஆவின் நிறுவனத்திடம் தினமும் உபரியாகும் 3 லட்சம் லிட்டர் பால், ஈரோடு, சேலம், தருமபுரி, மதுரை ஆகிய ஆவின் பால் பண்ணைகளுக்கு அனுப்பப்பட்டு, இதர பால் பொருள்களைத் தயாரிக்கும் வகையில் பால் பவுடராக மாற்றப்பட்டு, போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த பால் பவுடர் மூலம் தேவையான அளவு பால் உற்பத்தி செய்ய முடியும். எனவே, ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்று ஆவின் வட்டாரங்கள் உறுதி தெரிவித்தன.

**சென்னையை தாக்குமா லைலா புயல்!: வட தமிழகத்தில் கனமழை பெய்யும்**

First Published : 19 May 2010 12:00:00 AM IST

Last Updated : 19 May 2010 12:33:21 AM IST



சென்னை, மே 18: சென்னைக்கு அருகே மையம் கொண்டுள்ள லைலா புயல் காரணமாக வட தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 48 மணி நேரத்துக்கு பரவலாக பலத்த மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை இப்போது புயல் சின்னமாக உருவெடுத்துள்ளது. லைலா என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் புயல் இப்போது சென்னையில் இருந்து கிழக்கு - தென்கிழக்கு திசையில் 380 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இது மேலும் வலுவடைந்து மேற்கு-வடமேற்கு திசையில் நகரக் கூடும் என்று தெரியவந்துள்ளது.

**நாளை புயல் கரை கடக்கும்?:**

இந்தப் புயல் சின்னம் தொடர்ந்து தீவிரம் அடைந்து வியாழக்கிழமை (மே 20) அதிகாலை ஆந்திரத்தில் உள்ள ஓங்கோல் - விசாகப்பட்டினம் இடையே கரையைக் கடக்கக் கூடும். அப்போது தரைக்காற்று மணிக்கு 85 கிலோ மீட்டருக்கு மேல் அதிக வேகத்தில் வீசக்கூடும் என்று வானிலை ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக வடதமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் புதுவையிலும் பரவலாக மழை பெய்யும். இது, அடுத்து 48 மணி நேரத்துக்குள் படிப்படியாக வலுத்து பரவலாக பலத்த மழையாக மாறும். மாநிலத்தின் இதர பகுதிகளிலும் மிதமானது முதல் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

**மீனவர்களுக்கு எச்சரிக்கை:**

இதனால் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த கடற்காற்று வீசக் கூடும். கடல் கொந்தளிப்பாக இருக்கும். ராட்சத அலைகள் வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

**துறைமுகங்களில் எச்சரிக்கை கொடி:** புயல் வலுத்து வருவதையடுத்து, சென்னை, கடலூர், நாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களில் 3-ம் எண் புயல் அபாய எச்சரிக்கைக் கொடி ஏற்றப்பட்டுள்ளது.

இதேபோல எண்ணூர், புதுச்சேரி, தூத்துக்குடி, பாம்பன் ஆகிய துறைமுகங்களில் 2-ம் எண் புயல் அபாய எச்சரிக்கை கொடி ஏற்றப்பட்டுள்ளது.

**சென்னையில்...:** சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மாலையில் லேசான சாரல் மழையுடன் இதமான காலநிலை நிலவியது. மெரீனா கடலில் கடற்காற்றுடன் வேகமான அலைகள் வீசின.

**மேட்டுப்பட்டியில் 50 மில்லிமீட்டர் மழை:**

இந்நிலையில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரை முக்கிய இடங்களில் பதிவாகியுள்ள மழையளவு (மில்லி மீட்டரில்): மதுரை மாவட்டம் மேட்டுப்பட்டி 50, விராலிமலை 40, இலுப்பூர், ஒசூர், குன்னூர், தேவாலா, உத்தமபாளையம்,வேடசந்தூர் 30, புதுக்கோட்டை, கரூர், வேலூர், தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை, உடுமலைப்பேட்டை, கதவூர், விருதுநகர் 20.

**21ல் விவசாயிகள் குறை தீர் கூட்டம்**

அரியலூர்: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் வரும் 21ம் தேதி காலை 11 மணிக்கு அரியலூர் தாசில்தார் கூட்டமன்றத்தில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்ப்பாசனம், கடன் உதவிகள், இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு குறைகளை தெரிவிக்கலாம் என மாவட்டக் கலெக்டர் ஆபிரகாம் தெரிவித்துள்ளார்.

**தென்மேற்கு பருவமழை துவங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சி : கோடையின் தாக்கம் குறைந்து குளிர்ச்சி நிலவியது1**

உடுமலை : உடுமலை பகுதிகளில் தென் மேற்கு பருவ மழை துவங்கியுள்ளதால்; வறட்சி நீங்கி, விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.உடுமலை பகுதியில் விவசாயம் பிரதானமாக உள்ளது. அமராவதி, பி.ஏ.பி., பாசனம் மற்றும் இறவை, மானாவரி என ஒன்றரை லட்சம் ஏக்கர் பரப்பளவில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. கடந்தாண்டு, தென் மேற்கு மற்றும் வட கிழக்கு பருவ மழை ஏமாற்றியது. தொடர்ந்து, கோடை மழையும் கை கொடுக்காததால் உடுமலை பகுதிகளில், ஐந்து மாதங்களாக கடும் வறட்சி நிலை ஐந்து மாதங்களாக நீடித்ததால், சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்தது.

மழை இல்லாததால், மானாவாரி சாகுபடி பெருமளவு குறைந்தது. பாசன திட்டத்தின் கீழ் பயன்பெறும் பகுதிகளிலுள்ள நிலைப்பயிர்களுக்கு உயிர் தண்ணீர் கூட கிடைக்காத நிலை ஏற்பட்டது. கடும் வறட்சி காரணமாக குடிநீர் தட்டுப்பாடும் நிலவியது.இந்நிலையில், தற்போது தென் மேற்கு பருவ மழை துவங்கியுள்ளது. நேற்று முன்தினம் மாலை உடுமலையில் ஒரு மணி நேரமும், சுற்றுபுற கிராம பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது.உடுமலை நகரில் 16 மி.மீ., மழை பதிவானது. அமராவதி நகரில் 3.00 மி.மீ., மழையும்; திருமூர்த்தி அணையில் 5.5 மி.மீ., ; நல்லாறு 5.0 மி.மீ.,மழை பெய்தது. பெதப்பம்பட்டி 2.2 மி.மீ., ; நாட்டுக்கல்பாளையம் 5.0 மி.மீ.,; கொட்டமுத்தாம்பாளையம் 7.0 மி.மீ; தளவாய்பட்டணம் 3.0 மி.மீ., மழை பெய்தது. கடும் வறட்சி நிலவி வந்த நிலையில், தென் மேற்கு பருவ மழை துவங்கியுள்ளதால், உடுமலை பகுதிகளில் கோடையின் தாக்கம் குறைந்து, சீதோஷ்ண நிலை குளிர்ச்சிக்கு மாறியுள்ளது. மழை துவங்கியுள்ளதால், விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

அணைகள் நிலவரம் : திருமூர்த்தி அணை : திருமூர்த்தி அணையில், நேற்று காலை நிலவரப்படி 36.19 அடி நீர் மட்டம் இருந்தது. நீர் இருப்பு 1028.80 மில்லியன் கன அடியாகவும், அணைக்கு வினாடிக்கு 659 கன அடி நீர் காண்டூர்

கால்வாய் வழியாக வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து, 104 கன அடி நீர் திறந்து விடப்பட்டிருந்தது. பி.ஏ.பி., திட்ட முதலாம் மண்டல பாசனம் இறுதி சுற்றுக்கு வரும் 25ல் தண்ணீர் திறக்கும் வகையில், அணையில் நீர் சேகரிக்கும் பணி நடந்து வருகிறது.

அமராவதி அணை : நேற்று காலை நிலவரப்படி அணை நீர் மட்டம் 30.81 அடியாகவும், நீர் இருப்பு 422.62 மில்லியன் கனஅடியாகவும் இருந்தது. அணைக்கு வினாடிக்கு 22 கன அடி நீர் வரத்து நிலவியது.குடிநீருக்கு தண்ணீர் திறப்பு : பருவ மழை ஏமாற்றியதால் , அமராவதி அணை நீர் மட்டம் கடந்த மூன்று மாதமாக அதல பாதாளத்தில் உள்ளது. அணையில் வாழும்  உயிரினங்களுக்கு கூட தண்ணீர் இல்லாமலும், பாசன பகுதிகளிலும் கடும் வறட்சி நிலவி வருகிறது. அமராவதி ஆறும் வறண்டு காணப்படுவதால், ஆற்றின் மூலம் பயன்பெற்று வரும் வழியோர கிராமங்களில் கடும் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. வழியோர கிராமங்களில் நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டை தீர்க்கும் வகையில், ஆற்றில் குடிநீருக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என வழியோர உள்ளாட்சி அமைப்புகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.மழை ஓரளவு ஒத்துழைத்தால், ஒரு சில நாட்களில் அமராவதி அணையிலிருந்து உடுமலை, தாராபுரம் தாலுகா பயன்பெறும் வகையில் குடிநீருக்கு தண்ணீர் திறந்து விட வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விலை கிடைக்கும் வரை பால் உற்பத்தி நிறுத்தம் : உற்பத்தியாளர்கள் முடிவு**

மேட்டுப்பாளையம் :  'பாலுக்கு விலை உயர்வு கிடைக்கும் வரை, ஆவின் நிறுவனத்துக்கு பால் வழங்க மாட்டோம்' என்று, மேட்டுப்பாளையம் பகுதியில் உள்ள உற்பத்தியாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்துள்ளனர். மேட்டுப்பாளையம் தாலுகாவில் 50க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. பால் உற்பத்தியாளர்கள் காலையில் 8 ஆயிரம், மாலையில் 5 ஆயிரம் லிட்டர் பாலை, இச்சங்கங்களுக்கு வழங்குகின்றனர். மாடுகளுக்கு வழங்கப்படும் தீவன பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. ஆனால், பாலின் விலையை அரசு உயர்த்தாமல் காலம் கடத்தி வருகிறது. பாலுக்கு விலை உயர்வு வழங்கக்கோரி நேற்று முதல் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்காமல் காலவரையற்ற போராட்டத்தை துவக்கினர். இலுப்பநத்தம் குளிரூட்டு மையத்துக்கு பாலை கொண்டு வந்த உற்பத்தியாளர்கள், அங்கு வழங்காமல் பால் கேனை வைத்து போராட்டம் செய்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட பால் உற்பத்தியாளர்கள் கூறியதாவது: சிறுமுகை பகுதியில் 26 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. ஆவின் நிறுவனம் கொழுப்பு சத்து அடிப்படையில் லிட்டர் ஒன்றுக்கு, குறைந்தது 12, அதிகபட்சம் 14.50 ரூபாய் வழங்குகிறது. கொழுப்பு சத்துள்ள பால் வழங்க வேண்டும் என்றால், மாட்டு தீவனம், பருத்திக் கொட்டை, பின்னாக்கு, தவிடு, மக்காச்சோள குருனை ஆகியவை மாட்டுக்கு வழங்க வேண்டும். அனைத்து தீவனப் பொருட்களும் விலை கொடுத்து வாங்கி மாட்டுக்கு போட வேண்டும். ஒரு கிலோ மாட்டு தீவனம் 13 ரூபாய், பருத்திக் கொட்டை 16, தவிடு 8, மக்காச்சோள குருனை 12, ஒரு கட்டு தட்டு 16 ரூபாய் என விலை உயர்ந்து விட்டது. ஒரு லிட்டர் பால் உற்பத்தி செய்ய ஆட்கள் கூலி இல்லாமல் 12 ரூபாய் செலவாகிறது. ஒரு லிட்டர் பாலுக்கு 25 ரூபாய் விலையும்; தீவனப்பொருட்களுக்கு மானியமும் வழங்க வேண்டும். பாலுக்கு விலை கிடைக்கும் வரை கூட்டுறவு சங்கங்களுக்கு தொடர்ந்து பால் ஊற்றுவதில்லை என்று காலவரையற்ற போராட்டம் செய்ய முடிவு செய்துள்ளோம். இப்பகுதியில் தனியார் நிறுவனத்துக்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்கள் எங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இவ்வாறு பால் உற்பத்தியாளர்கள் கூறினர். போலீஸ் பாதுகாப்புடன் கூட்டுறவு சங்கங்களில் கொள்முதல் செய்த பாலை, வண்டிகளில் குளிரூட்டு மையத்துக்கு ஆவின் நிறுவன அதிகாரிகள் கொண்டு சென்றனர்.

**வாழைத்தோட்டம் ஆறு தூர்வாரும் பணிதுவக்கம்: தினமலர் செய்தி எதிரொலி**

வால்பாறை : 'தினமலர்' செய்தி எதிரொலியாக வால்பாறை வாழைத்தோட்டம் ஆறு தூர்வாரும் பணி துவங்கியது.கடந்த ஆண்டு பெய்த கன மழையால் வாழைத்தோட்டம் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் தண்ணீரில் மூழ்கின. இதனால் நள்ளிரவு நேரத்தில் மக்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.வால்பாறை அரசு போக்குவரத்துக்கழக டெப்போவும் தண்ணீரில் மூழ்கின. இதனால் அரசு பஸ்கள் டெப்பொவுக்கு வெளியே நிறுத்தப்பட்டன.வால்பாறையில் ஆண்டு தோறும் தென் மேற்குப்பருவ மழை பெய்யும் போது, ஆற்றில் வெள்ளப்பெருக்கெடுத்து,வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து விடுகின்றன. இது குறித்த செய்தி 'தினமலரில்' பல முறை வெளியானது. வால்பாறை வாழைத்தோட்டம் பகுதியில் உள்ள ஆற்றை தூர்வார வேண்டும் என்று இப்பகுதி மக்களும் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். கடந்த வாரம் வால்பாறை வந்த மாவட்ட கலெக்டர் உமாநாத், வாழைத்தோட்டம் ஆற்றை மழை காலத்திற்கு முன்பு தூர்வாரும் வகையில் ரூ.5 லட்சம் நிதிஒதுக்கி விரைவில் பணி செய்துமுடிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதனையடுத்து நேற்று முதல் வாழைத்தோட்டம் ஆறு தூர்வாரும் பணி துவங்கியது.

**மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் முறை: வேளாண்துறை அறிவிப்பு**

உடுமலை : குடிமங்கலம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் மல்பெரி மற்றும் இதர செடிகளில் பரவி வரும் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.இது குறித்து குடிமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சைலஸ் வெளியிட்டுள்ள அறிக்கை:குடிமங்கலம் வட்டாரத்தில் பரவலாக மாவுப்பூச்சியின் தாக்குதல் கறிவேப்பிலை, தென்னை, பப்பாளி, மரவள்ளி, மல்பெரி, செம்பருத்தி, பருத்தி, கொய்யா, கத்தரி, தக்காளி போன்ற பயிர்களையும் பார்த்தீனியம் எருக்கு போன்ற களை செடிகளையும் தாக்கியுள்ளது.தாய் மாவுப்பூச்சி 600 முட்டைகளை வரை இட்டு, ஆண்டிற்கு 15 தலைமுறைகள் வரை பெருக்கம் செய்யும். காற்று, பறவைகள், விலங்குகள், மனிதர்கள் மற்றும் எறும்புகள் மூலம் ஒரிடத்தில் இருந்து மற்றொரு இடத் திற்கு பரவும். மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த பூச்சிகள் அதிகமாக தாக்கியுள்ள செடிகள் மற்றும் மரங்களின் பகுதிகளை அகற்றி எரிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட செடிகளையும், களைகளையும் தண்ணீர் பாயும் வாய்க்காலில் போடக்கூடாது. தோட்டத்தில் இருக்கும் எறும்பு புற்றுகளை கண்டுபிடித்து அழிக்க வேண்டும்.தேசிய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம் மற்றும் வேளாண்பல்கலைகழகத்தினர் பரிந்துரைத்துள்ள பூச்சிக்கொல்லி மருந்து; ஒரு லிட்டர் தண்ணீரில் மீதைல்டெமெட்டான் 2.5 மில்லியும், இதர மருந்துகளான பாஸ் போமிடான், டைமெத்தோயேட், குளோர்பைரிபாஸ், புரொபெனோபாஸ், அசிபேட் ஆகியவற்றை 2 மில்லியும் கலந்து தெளிக்கலாம்.மல்பெரி தோட்டத்தில் சுற்றியுள்ள களைகள் மற்றும் இதர செடிகளை அழிக்க வேண்டும். ஒரே சமயத்தில் மல்பெரி தோட்டம் முழுவதும் கவாத்து செய்ய வேண்டும்.

பூச்சி தாக்கியுள்ள பகுதிகளை தீயிட்டு அழிக்க வேண் டும். கவாத்து செய்ய பின் புரொபெனோபாஸ் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி(ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் மருந்து கரைசல்)என்ற அளவில் கலந்து மல்பெரி கட்டை தண்டு மற்றும் செடியை சுற்றியுள்ள மண் நன்கு நனையும்படி தெளிக்கவும். ஒட்டும் திரவத்தை தெளிக்கும் போது சேர்க்க வேண்டும். 10-15 நாட்கள் இடைவெளியில் தேவைக்கேற்ப திரும்பவும் தெளிக்கலாம். மருந்து அடித்து 20 நாட்கள் கழித்து இலையை பட்டுப்புழுக்களுக்கு உணவாக அளிக்கலாம். இவ்வாறு அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

**நெகமத்தில் கொப்பரை ஏலம் கிலோ ரூ.32.10**

பொள்ளாச்சி : நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 32.10 ரூபாய் விலை கிடைத்தது.நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 22 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 155 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் மூன்று வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 58 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 30.75 ரூபாய் முதல், அதிகபட்சம் 32.10 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 97 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 24.25 ரூபாய் முதல், அதிகபட்சம் 30.60 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறுகையில், 'தேங்காய் வரத்து அதிகரித்துள்ளதால் கொப்பரை உற்பத்தியும் அதிகரித்துள்ளது. அரசு கொப்பரை கொள்முதல் சூடுபிடித்துள்ளதால், வெளிமார்க்கெட்டில் கொப்பரைக்கு கிராக்கி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், தேங்காய் எண்ணெய் விலையும் உயர்ந்து வருகிறது.கடந்த இரண்டு வாரங்களாக நெகமம் ஏலத்தில் கொப்பரை விலை சரியாமல் உள்ளது. வரும் வாரங்களில் கொப்பரை விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது' என்றனர்.

**15 ஆயிரம் லி., பால் கொள்முதல் பாதிப்பு**

ஈரோடு: பால் உற்பத்தியாளர்களின் இரண்டாவது நாள் போராட்டத்தால், ஈரோட்டில் ஆவின் பால் கொள்முதல் 15 ஆயிரம் லிட்டர் வரை பாதிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து 723 கொள்முதல் நிலையங்கள் மூலம் ஆவின் பால் கொள்முதல் செய்கிறது. மாவட்டத்தில் சராசரியாக தினமும் 2.20 லட்சம் லிட்டர் முதல் 2.30 லட்சம் லிட்டர் வரை பால் ஆவின் கொள்முதல் செய்கிறது.

இதில் ஒரு லட்சம் லிட்டர் பால், சென்னைக்கு அன்றாடம் அனுப்பப்படுகிறது. ஈரோடு ஆவினில் பால்கோவா, நெய் போன்றவை உற்பத்தி செய்யப்படுகிறது. பால் உற்பத்தியாளர்கள், பால் கொள்முதல் விலையை உயர்த்தும் வரை கொள்முதல் நிலையங்களில் உற்பத்தி செய்த பாலை வழங்க மாட்டோம் என இரண்டாவது நாளாக போராட்டம் நடத்தி வருகின்றனர். பால் உற்பத்தியாளர்களின் போராட்டத்தின் முதல் நாளான நேற்று முன்தினம் ஆவினுக்கு 25 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் பாதிக்கப்பட்டது. இரண்டாம் நாளான நேற்று, 15 ஆயிரம் லிட்டர் வரை கொள்முதல் பாதிக்கப்பட்டுள்ளது. தொடரும் போராட்டத்தால், பால் கொள்முதல் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது.

ஆவின் மேலாளர் சுபாஸ்சந்திரபோஸ் கூறியாவது: பால் உற்பத்தியாளர்கள் பால் விலையை உயர்த்த கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர். சமீபத்தில் அரசு பால் விலையை உயர்த்தியபோதே, உயர்த்திய விலை போதாது என கூறியிருக்க வேண்டும். அதைவிடுத்து, மீண்டும் போராட்டம் நடத்துகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் 723 கொள்முதல் நிலையங்கள் மூலம் பால் கொள்முதல் செய்கிறோம். தினமும் சராசரியாக 2.20 லட்சம் முதல் 2.30 லட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்கிறோம். இதில் ஒரு லட்சம் லிட்டர் பால் சென்னைக்கு அனுப்பி வைக்கிறோம். பால் உற்பத்தியாளர் போராட்டத்தால், முதல்நாளான நேற்று முன்தினம் 25 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் பாதித்தது. இரண்டாம்நாளான நேற்று 15 ஆயிரம் லிட்டர் வரைதான் கொள்முதல் பாதிக்கப்பட்டுள்ளது. அதுவும் நேற்று முகூர்த்த தினம் என்பதால், குறைந்துள்ளது. இல்லையெனில் பால் கொள்முதல் குறைந்திருக்காது. இன்று வழக்கம்போல் பால் கொள்முதல் இருக்கும் என எதிர்பார்க்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

**முதல் போக நெல் சாகுபடியில் வெளி மாவட்ட தொழிலாளர்கள்**

கோபிசெட்டிபாளையம்: கோபி அரக்கன்கோட்டை பகுதியில் முதல் போக சாகுபடிக்காக நெல் நாற்று நடும் பணி துவங்கியுள்ளது. சேலம் உள்ளிட்ட வெளிமாவட்டத்தில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் கோபியில் குவிந்த வண்ணம் உள்ளனர். கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிக்கு ஏப்ரல் 15ம் தேதி பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. கோபி சுற்று வட்டாரப் பகுதிகளில் நெல் நாற்று விடும் பணி துவங்கியது. தண்ணீர் திறக்கப்பட்டு ஒரு மாதமாகியுள்ள நிலையில் தற்போது நெல் நாற்று நடும் பணி விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் விவசாய கூலியாட்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் இருந்து விவசாயக் கூலித் தொழிலாளர்களை கோபி பகுதி விவசாயிகள் அழைத்து வந்துள்ளனர். அவர்கள் இங்கேயே முகாமிட்டு, விவசாயப்பணிகளை மேற்கொண்டுள்ளனர். கடந்த இரண்டு மாதங்களாக வறட்சியாக காணப்பட்ட பங்களாபுதூர் ரோடு மற்றும் அத்தாணி ரோட்டின் இருபுறமும் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் நெல் நாற்று நடும் பணி துவங்கியதால், அவை பச்சைப்பசேல் என மாறியுள்ளன.

**ஈரோடு சந்தைக்கு மீன் வரத்து குறைவு**

ஈரோடு: ஈரோடு மார்க்கெட்டுக்கு மீன் தேவை அதிகமிருந்தும், வரத்து குறைந்துள்ளது. தமிழகத்தில் 1,075கி.மீ., நீளமுள்ள கடற்கரையில் 40 லட்சம் சதுர கி.மீ., உள்ள கடல்பகுதியில் மீன்வளம் உள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் ஐந்து லட்சம் டன் வரை மீன் பிடிக்கப்படுகிறது. மீன்களின் இனப்பெருக்க காலமான ஏப்ரல் 15 முதல் மே 29 வரை எந்திரப் படகுகள் மூலம் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், ஈரோடு மீன் மார்க்கெட்டுக்கு மீன் வரத்து முற்றிலும் குறைந்துள்ளது.

ஈரோடு மீன் வியாபாரி ஒருவர் கூறியதாவது: ஆற்று மீன்களைத்தான் விற்பனைக்கு வைத்துள்ளோம். வஞ்சரம், வாவல், சங்கரா, ஊளி, மத்தி, அயலை, நெத்திலி, கொடுவா ஆகிய கடல் மீன்கள் வரத்து சுத்தமாக இல்லை. அணை மீன்கள் வரத்துள்ளது. அணை மீன்களில் லோகு மற்றும் கட்லா ஆகியவை கிலோ தலா 80 ரூபாய், கெழுத்தி 70 ரூபாய், ஜிலேபி 35 முதல் 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**மிளகாய் விலையில் 'காரம்' அதிகம்**

ஓசூர்: ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் பச்சை மிளகாய் விலை கிலோ 45 ரூபாய்க்கு விற்பனையாவதால், பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் ஆண்டு முழுவதும் 2,000 ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது.

ஓசூர், தேன்கனிக்கோட்டை, பாகலூர், பேரிகை, சூளகிரி மற்றும் கெலமங்கலம் சுற்றுவட்டார கிராம பகுதியில் சாதாரண பச்சை மிளகாய், ஹைபிரிட் குடை மிளகாய் அதிகமாக விளைகின்றன. சாதாரண பச்சை மிளகாயில் கோ, மையிகோ, நாம்தாரி உள்ளிட்ட ஐந்து ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். ஹைபிரிட் குடை மிளகாயில், பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய ரகங்கள் விளைவிக்கப்படுகின்றன. மிளகாய்க்கு ஆண்டு முழுவதும் உள்ளூர், வெளியூர் சந்தைகளில் கடும் கிராக்கி நிலவுகிறது. ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் இரு மாதங்களாக மிளகாய் விளைச்சல் குறைந்தது. ஓசூர் உழவர்சந்தைக்கு தினம் 3,000 கிலோ மிளகாய் விற்பனைக்கு வந்தது. ஒரு வாரமாக 800

கிலோ மிளகாய் மட்டுமே விற்பனைக்கு வருகிறது.  மிளகாய் விலை கிடுகிடுவென உயர்ந்து நேற்று மொத்த காய்கறி கடைகளில் கிலோ 45 ரூபாய்க்கு விற்பனையானது.

உழவர்சந்தையில் கிலோ 35 ரூபாய்க்கு விற்பனையானது. சில்லறை விற்பனை கடைகளில் 100 கிராம் மிளகாய் 5 ரூபாய் முதல் எட்டு ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. மிளகாய் மட்டுமில்லாது, அனைத்து காய்கறிகள் விலையும் எப்போதும் இல்லாத வகையில் உயர்ந்து வருவதால் நடுத்தர, ஏழை மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஓசூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் காளியப்பன் கூறிதாவது: மிளகாய் சாகுபடியை பொறுத்தவரையில், அதிக மழையும், அதிக வெயிலும் ஆகாது. அதிக வெயில் அடித்தால் பூ சரியாக விரிவடையாது. காய்ந்து உதிர்ந்து விடும். விளைச்சல் 40 சதவீதம் குறைந்து விடும். அதேபோல், அதிக மழை பெய்தால், பூக்கள் உதிர்ந்து அல்லது அழுகி விடும்.

இரு மாதமாக அதிக வெயிலும், ஆலங்கட்டி மழையும் பெய்து வருவதால் மிளகாய் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சீஸன் நேரத்தில் ஏக்கருக்கு எட்டு டன் வரை மகசூல் கிடைக்கும். கோடை மற்றும் மழை நேரமான தற்போது ஏக்கருக்கு வெறும் ஐந்து டன் மட்டும் மகசூல் கிடைக்கிறது. விளைச்சல் குறைவால் தற்போது விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. வரும் ஜூன், ஜூலை மிளகாய் சீஸன் காலம்  ன்பதால், ஆகஸ்ட் மாதத்தில் இருந்து விலை குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**சம்பங்கி பூ கிலோ ரூ.250**

மதுரை: இன்று முகூர்த்த நாள் என்பதால், மதுரை பூ மார்க்கெட்டில் நேற்று சம்பங்கி கிலோ 250 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கடந்த வாரம் 50 ரூபாய்க்கு விற்றது. மல்லிகை விலையும் 60 ரூபாயில் இருந்து 100 ரூபாயாக உயர்ந்தது. மற்ற பூ விலைகளும் அதிகரித்துள்ளது. மார்க்கெட் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறுகையில், "ஒரு கிலோ ரோஜா 120 ரூபாய், அரளி 40, கோழிக்கொண்டை 40, மரிக்கொழுந்து 40, செண்டுப்பூ 60, வாடாமல்லி 30, கனகாம்பரம் 300, முல்லைப்பூ 200 ரூபாய்க்கு விற்கப்பட்டது," என்றார்.வாழை இலை விலை சரிவு

**.பாமாயில் விலை மீண்டும் குறைந்தது**

மதுரை: மலேசியாவில் பாமாயில் உற்பத்தி அதிகரிப்பால், மதுரையில் மீண்டும் விலை குறைந்தது.எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது : கடந்த வாரம் 645 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் பாமாயில், நேற்று 10 ரூபாய் குறைந்து 635 ரூபாய்க்கு விற்கப் பட்டது. ரைஸ்பிரான் ஆயில் 635 ரூபாயிலிருந்து 630 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.கடலை எண்ணெய் 1040ரூபாய், சூரியகாந்தி எண்ணெய் 780, தேங்காய் எண்ணெய் 950, வனஸ்பதி 700, நல்லெண்ணெய் 1250, தும்பை நல்லெண்ணெய் 1700 ரூபாய் என்பதில் மாற்றமில்லை, என்றார்.

**மாறாத அரிசி விலை**

மதுரை: மதுரையில் வெளி மாநிலங்கள், வெளி மாவட்டங்களில் இருந்து நெல் வரத்து சீராக இருப்பதால், இரு வாரங்களாக விலையில் மாற்றம் ஏற்படவில்லை.
அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது:கர்நாடக பொன்னி பழசு 38 ரூபாய், புதுசு 29, டீலக்ஸ் பொன்னி பழசு 32, புதுசு 25 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வெள்ளை பொன்னி பழசு 35, புதுசு 27க்கும், செல்லப் பொன்னி பழசு 23, புதுசு 20லிருந்து 21க்கும் விற்கப்பட்டது.ஐ.ஆர். இருபது பழசு 23 ரூபாய், புதுசு 22, ஐ.ஆர். 36 பழசு 22, புதுசு 21 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 29, மாவு

பச்சரிசி பழசு 21, பிரியாணி அரிசி முதல் ரகம் 52, அடுத்த ரகம் 51, 49 ரூபாய்க்கும், புதுசு 46 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது, என்றார்.

**மாம்பழ வரத்துஅதிகரிப்பு**

மதுரை: மதுரைக்கு மாம்பழ வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்து வருகிறது. நேற்று சப்பட்டை மாம்பழம் ஒரு கிலோ 50 ரூபாய், பாலாமணி 40, அல்போன்சா 40, இமாம்பசந்த் 80, காலாபாடி 40, மல்கோவா 70 ரூபாய்க்கு விற்கப் பட்டது.நாக்பூர் ஆரஞ்சு ஒரு கிலோ 80, சாத்துக்குடி 40,அன்னாசி25, பப்பாளி 15, சப்போட்டா 20, ஆப்பிள்கள் 125-110, பேரிக்காய் 70, துரியன்பழம் 350, கிர்னி 30, ஆஸி., திராட்சை 200, பன்னீர் திராட்சை 50, தில்குஷ் திராட்சை 50, மலை வாழைப்பழம் ஒன்று 3.50 ரூபாய்க்கு விற்கப்படுவதாக, யானைக்கல் வியாபாரி செந்தில் தெரிவித்தார்.

**கொத்தமல்லி கிலோ 100 ரூபாய்**

மதுரை: கோடை வெயிலால் கொத்தமல்லி வரத்து பாதிக்கப்பட்டுள்ளதால், மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் நேற்று கிலோ 100 ரூபாய்க்கு விற்கப்பட்டது.
"ஓசூர் பகுதியிலிருந்து வரத்து வந்து கொண்டிருப்பதால் தான், 100 ரூபாய் என்ற விலையில் நிற்கிறது. அதே சமயம் வெண்டைக்காய் வரத்து அதிகரித்துள்ளதால், கிலோ 5 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வாங்குவதற்கு யாரும் முன்வராததால், 2 ரூபாய்க்கு வற்றல் கம்பெனிகளுக்கு விற்கிறோம்" என்கிறார் மார்க்கெட் சங்கத் தலைவர் முருகன்.

மற்ற காய்கறி விலை குறித்து, அவர் கூறியதாவது:ஒரு கிலோ தக்காளி 30 ரூபாய், உருட்டு தக்காளி 20, கத்தரிக்காய் 12, வெள்ளை கத்தரிக்காய் 10, பூசணி 7, புடலங்காய் 12, சுரைக்காய் 6, பீட்ரூட் 18, முள்ளங்கி 12, கேரட் 30, நூக்கல் 25, உருளை கிழங்கு 14, சேனை கிழங்கு 30, கருணை கிழங்கு 35, காலிபிளவர் 25-30, முட்டைகோஸ் 12, இஞ்சி 50, பச்சை மிளகாய் 25, ஆந்திரா பச்சை மிளகாய் 20, வெங்காயம் 10, சிறியது 14, பாகற்காய் 20, சிறியது 25, பீன்ஸ் 25, பட்டர் பீன்ஸ் 60, சோயா பீன்ஸ் 45, பட்டாணி 100, முருங்கைக்காய் 20, கீரை வகைகள் 10, புதினா 100, அவரைக்காய் 30, கொத்தவரை 9 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அடுத்தடுத்து முகூர்த்த நாட்கள் வருவதால், காய்கறி விலையில் ஏற்றம் இருக்க வாய்ப்புள்ளது, என்றார்.சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**பருப்பு விலையில் ஏற்றம், இறக்கம்**

மதுரை: மதுரைக்கு அனைத்து பருப்பு வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்துள்ளது.பருப்பு வியாபாரிகள் சங்கச் செயலாளர் வெற்றிச்செல்வன்
கூறியதாவது :கடந்த வாரம் 4700 ரூபாய்க்கு விற்ற வெள்ளை துவரை பயறு நேற்று 4800 ரூபாய்க்கும், சிவப்பு துவரை 4500 ரூபாயிலிருந்து 4600 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.
துவரம் பருப்பு 6500 ரூபாய் என்பதில் மாற்றமில்லை. சிவப்பு துவரம் பருப்பு 6300லிருந்து 6200க்கு விற்கப்பட்டது.உளுந்தம் பயறு 5400லிருந்து 5700க்கும், மியான்மர் பயறு 5250லிருந்து 5000க்கும், வடமாநில பயறு 6200க்கும் விற்கப் பட்டது. உளுந்தம் பருப்பு 7250லிருந்து 7500க்கும், மியான்மர் பருப்பு 6700லிருந்து 7000க்கும் விற்கப்பட்டது.அவியலுக்கு பயன்படும் பாசி பயறு 7000லிருந்து 6900க்கும், பருப்பு தயாரிப்பிற்கு பயன்படும் பயறு 6300லிருந்து 6250க்கும், பருப்பு 8300லிருந்து 8200க்கும், அடுத்த ரகம் 8000லிருந்து 7900க்கும் விற்கப்பட்டது. கடலை பயறு 2125லிருந்து 2150க்கும், பருப்பு 2625லிருந்து 2700க்கும், பட்டாணி பயறு 6450லிருந்து 6500க்கும், பருப்பு 6650லிருந்து 6700 ரூபாய்க்கும் விற்கப்பட்டது, என்றார்.

**காய்கறி விலை கடும் உயர்வு: கொத்தமல்லி கட்டு 50 ரூபாய்**

ராசிபுரம்: தினசரி மார்க்கெட்டில் கொத்தமல்லி விலை தாறுமாறாக உயர்ந்து ஒரு கட்டு 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ராசிபுரத்தில் சின்னகடைவீதி அருகே உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு தலைவாசல், ஓசூர், பெங்களூரு ஆகிய பகுதிகளில் இருந்தும், சுற்றுப்புற கிராமங்களில் இருந்தும் காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது.

இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால், காய்கறி உற்பத்தி பெருமளவில் குறைந்து, மார்க்கெட்டுக்கு காய்கறிகளின் வரத்தும் குறைந்தது. வரத்து குறைவால் காய்கறிகளின் விலையும் தாறுமாறாக உயர்ந்துள்ளது. கொத்தமல்லி தழை ஒரு கட்டு 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதேபோல் புதினாவும் கட்டு15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மார்க்கெட்டில் நாட்டு தக்காளி ஒரு கிலோ 30 ரூபாய்க்கும், பெங்களூரு தக்காளி ஒரு கிலோ 25 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வாழைக்காய் ஒன்று 10 ரூபாய்க்கு விற்பனை செய்வதால், மக்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். காய்கறிகள் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், ஹோட்டல், கேன்டீன் மற்றும் கல்லூரி ஹாஸ்டல்களுக்கு முன் கூட்டியே வாங்கி வைக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. ராசிபுரம் பஸ் ஸ்டாண்டில் செயல்படும் உழவர் சந்தையில் வியாபாரிகளுக்கே காய்கறிகள் விற்கப்படுகின்றன. காலை 6 மணிக்குள் வியாபாரிகள், ஹோட்டல் கடைக்காரர்கள் பேரம் பேசி மொத்த காய்கறிகளையும் அள்ளிச்சென்று விடுகின்றனர். மேலும், உழவர் சந்தையில் காய்கறி வாங்கச்செல்லும் மக்களுக்கு கால், அரை கிலோவுக்கு மேல் தருவதில்லை. வெங்காயம், தேங்காய் மட்டுமே கேட்கும் அளவு கொடுக்கின்றனர். அதனால், மக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இது குறித்து அப்பகுதியை சேர்ந்த மக்கள் சிலர் கூறியதாவது: இந்த ஆண்டு எதிர்பார்த்த மழை பொழிவு இல்லாததால் காய்கறி விலை கடுமøயாக உயர்ந்துள்ளது. காய்கறிகளின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளதால், சமையலுக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உழவர் சந்தையிலும் வியாபாரிகள் ஆதிக்கம் அதிகரித்துள்ளதால், மக்களுக்கு காய்கறிகள் கிடைப்பதில்லை. எகிறி வரும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவும், மக்களுக்கு எளிதாக காய்கறிகள் கிடைக்கவும், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**ஆயிரம் அன்னாசிகளை கொண்டு 'மெகா' பழம் : சிம்ஸ் பூங்கா பழ கண்காட்சிக்கு வந்தால் 'இனிக்கும்'**

குன்னூர் : குன்னூர் இந்தாண்டு நடத்தப்படவுள்ள பழக்கண்காட்சியில் 1,000க்கணக்கான பழங்களை கொண்டு காட்சிப் பொருட்கள் வைக்கப்படவுள்ளன; இசை கச்சேரி, படகு சவாரி என சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.நீலகிரியில் நடத்தப்படும் கோடை விழாவின் ஒரு பகுதியாக குன்னூர் சிம்ஸ்பூங்காவில் வரும் 22, 23 தேதிகளில் 52வது பழ கண்காட்சி நடத்தப்படவுள்ளது. பழ கண்காட்சியில் இடம்பெறவுள்ள அம்சங்கள் குறித்து தோட்டக்கலை துறை இணை இயக்குனர் இஸ்ரவேல் கூறியதாவது;இந்தாண்டு குன்னூர் சிம்ஸ்பூங்காவில் நடத்தப்படவுள்ள பழ கண்காட்சியை சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பூங்காவின் முகப்பில், 12 அடி உயரத்தில் மா, பலா, வாழை உட்பட பல பழங்களால் அலங்கரிக்கப்பட்ட அலங்கார வளைவு பயணிகளை வரவேற்க உள்ளது. பூங்காவின் முதல் தளத்தில் உள்ள பசும்புல்வெளியில் 12 அடி உயரத்தில் 1,000 அன்னாசி பழங்களை கொண்டே அன்னாசி பழ வடிவிலான காட்சி அமைக்கப்படவுள்ளது.

5 அடி உயரமுள்ள மெகா சைஸ் சாத்துக்குடி பழத்தின் தோற்றத்தை 1,250 சாத்துக்குடி பழங்களை கொண்டு வடிவமைக்கப்படவுள்ளது. மாங்கனிகளை கொண்டு அலங்கார தோரணம் அமைக்கப்படவுள்ளது. இரு நாட்கள் நடத்தப்படவுள்ள பழக்கண்காட்சி தினமும் காலை 7.00 மணிக்கு துவங்கி மாலை 7.00 மணிவரை நடத்தப்படும். மின் விளக்கு அலங்காரமும் செய்யப்படவுள்ளன. கடந்த ஆண்டுகளில் பூங்காவின் முகப்பு பகுதியில் உள்ள நடைபாதையோரத்தில் காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

மக்கள் நெருக்கியடித்து காட்சியை ரசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தாண்டு, பூங்காவின் கீழ் தளத்தில் மக்கள் வசதியாக பார்த்து ரசிக்கும் வகையில் காட்சி அரங்குகள் அமைக்கப்படவுள்ளன.இரு நாட்களும் காலை 10.00 மணி முதல் இன்னிசை கச்சேரி நடத்தப்படவுள்ளது.

பூங்காவுக்கு அருகேயுள்ள கூடுதல் நிலத்தில் புல்வெளி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பூங்காவில் நடவு செய்யப்பட்டுள்ள மலர் செடிகள் பூத்து குலுங்குகின்றன. பழ கண்காட்சியன்று மலை பிரதேசம், குளிர், வெப்ப மண்டலம் உட்பட பல வகை பழங்கள் காட்சிக்காக வைக்கப்படவுள்ளன. தோட்டக்கலை துறை சார்பில் ஒரு அரங்கும், பிற அரசு துறை நிறுவனங்களின் சார்பில் ஏழு அரங்குகளும் இடம் பெறவுள்ளன. சுமார் 70 - 80 போட்டியாளர்கள் காட்சி அரங்குகளை அமைக்கவுள்ளனர்.

பூங்காவுக்கு வரும் பயணிகளுக்கு நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு 20 ரூபாய், சிறியவர்களுக்கு 10 ரூபாய் வசூலிக்கப்படவுள்ளது.வரும் 27, 28ம் தேதி கூடலூரில் நடத்தப்படவுள்ள வாசனை திரவிய கண்காட்சியில் வாசனை திரவிய பொருட்களை கொண்டு பார்லிமென்ட் கட்டடத்தின் வடிவம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. வரும் 29,30 தேதிகளில் கோத்தகிரி நேரு பூங்காவில் நடத்தப்படவுள்ள காய்கறி கண்காட்சியில், காய்கறிகளை கொண்டு பல அலங்காரங்கள் செய்யப்படவுள்ளன. குறிப்பாக, பழங்குடியின மக்களின் குடியிருப்பை காரட், பீன்ஸ், காலிபிளவர் மூலம் அமைத்து காட்சிக்கு வைக்க திட்டமிடப்பட்டுள்ளது; மலர்களின் அணிவகுப்பையும் பார்க்க முடியும்.இவ்வாறு, இஸ்ரவேல் கூறினார். குன்னூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் (பொ) மணி, சிம்ஸ்பூங்கா மேலாளர் சிபிலா மேரி உடனிருந்தனர்.

**மஞ்சூர் விவசாயிகள் கவலை**

மஞ்சூர் : மழை வேண்டி கிராமங்கள் தோறும் பிரார்த்தனை செய்யப்பட்டு வருகிறது.மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.கடந்த ஜனவரி மாதத்திலிருந்து போதிய மழை பெய்யாததால், கோடை காலம் வெயிலின் காரணமாக வறட்சி நிலவியது. ஒரு சில பகுதிகளில் தேயிலை செடிகள் கருகும் அளவுக்கு வெயில் தென்பட்டது. மலை காய்கறி பயிரிட்ட விவசாயிகளும் மழை இல்லாமல் 'ஸ்பிரிங்லர்' மூலம் விவசாய பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சினர். கடந்த மாதத்தில் ஒரு சில நாட்கள் மழை பெய்தது.இந்த மழை மலை காய்கறி விவசாயத்திற்கு சற்று போதுமானதாக இல்லை. தற்போது தொடர்ந்து வெயில் அதிகரித்து வருகிறது. இதனால் மகசூலும் அடியோடு குறைந்து வருகிறது. தொடர்ந்து மழை பெய்யாததால் கவலையடைந்த விவசாயிகள் கிராமங்கள் தோறும் மழை வேண்டி சிறப்பு பிரார்த்தனை நடந்து வருகிறது.

**விவசாய சந்தேகங்களுக்கு நேரில் அட்வைஸ்: வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்**

கும்பகோணம்: திருப்பனந்தாள் வட்டார கிராமங்களில் விவசாயிகளின் பூச்சி, நோய் குறித்த சந்தேகங்களுக்கு வேளாண் உதவி இயக்குநர் நேரில் வந்து விளக்கமளிக்கவுள்ளார்.

இதுகுறித்து திருப்பனந்தாள் வேளாண் உதவி இயக்குனர் முத்துக்கூரி கூறியதாவது: திருப்பனந்தாள் வட்டாரத்தில் நெல் 800 ஹெக்டேரிலும், சித்திரை பட்டம் உளுந்து 100 ஹெக்டேரிலும், பருத்தி 42 ஹெக்டேரிலும் கோடை சாகுபடி நடக்கிறது. மீதமுள்ள சாகுபடி செய்யப்படாத நிலங்களில் கோடை மழை பெய்யும் வாய் ப்பை பயன்படுத்தி கோடை உழவு செய்யவேண்டும்.

திட்டப்பணிகளில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தில் விதை நெல் மானியம் ஐந்து ரூபாய் வழங்கப்படுகிறது. செம்மை நெல் சாகுபடி செயல்விளக்கம் செயல்படுத்தப்பட உள்ளது. வேளாண் உதவி அலுவலர்கள்

முதல் மற்றும் மூன்றாம் வாரங்களில் கிராமங்களுக்கு நேரில் வருகை தர உள்ளனர். முதல் மற்றும் மூன்றாம் வாரங்களில் திங்கள் கிழமை திருப்பனந்தாள் மேற்கு, சிக்கல்நாயக்கன்பேட்டை, பந்தநல்லூர், கஞ்சனூர், கீழ்மாந்தூர், விநாயகன் தெரு, செவ்வாய்கிழமை பட்டம், கொண்டசமுத்திரம், நெய்குப்பை, மணலூர், ஆரலூர், உக்கரையும், புதன்கிழமை மாவுத்திருப்பு, கன்னாரக்குடி, மரத்துரை, துகிலி, செருகுடி, சிதம்பரநாதபுரமும், வெள்ளிக்கிழமை வீராக்கண், கட்டாநகரம், கீழ்மணக்குடி, திருமாந்துரை, கோட்டூர், வேலூர், முள்ளங்குடி என வேளாண் உதவி அலுவலர்கள் நேரில் செல்கின்றனர்.

இரண்டாம் மற்றும் நான்காம் வாரங்களில் திங்கள் கிழமை திருப்பனந்தாள் கிழக்கு, குறிச்சி, வன்னிக்குடி, திருக்கோடிகாவல், கதிராமங்கலம், கோவில்ராமபுரமும், செவ்வாய்கிழமை மணிக்குடி, மேலகாட்டூர், சாயினாபுரம், மகாராஜபுரம், கூத்தனூர், திட்டச்சேரியும், புதன்கிழமை நரிக்குடி, அத்திப்பாக்கம், சரபோஜிராஜபுரம், பாஸ்கரராஜபுரம், குணதலபாடி. குலசேகரநல்லூரும், வெள்ளிக்கிழமை சாத்தனூர், திருவள்ளியங்குடி, சிவபுராணி, திருலோகி, திருமங்கைசேரி, கருப்பூர், மேலசூரியமூலை, முள்ளுக்குடி, கீழசூரியமூலை, இருமுளை, காவனூர் என வேளாண்மை உதவி அலுவலர்கள் நேரில் வருகை தரஉள்ளனர். விவசாயிகள் திட்டப்பணிகள் குறித்தும், பூச்சு நோய் குறித்தும் தங்களுக்கு எழும் சந்தேகங்களை கேட்டு நிவர்த்தி செய்து அதிக மகசூல் பெறவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**வரும் 28ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தஞ்சாவூர்: தஞ்சையில் வரும் 28ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறவுள்ளதாக கலெக்டர் சண்முகம் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பு: தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் வரும் 28ம் தேதி காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளும் முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, நுகர்பொருள் வாணிப கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒரு கிலோ மல்லிகை விலை ரூ.100**

திருப்பூர் : அக்னி வெயில் வீசி வருவதால், கொத்தமல்லி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கொத்தமல்லி கட்டு 30 ரூபாயை தொட்டுள்ளது; வரத்து குறைந்து, காய்கறி விலையும் அதிகரித்து வருகின்றன. தங்கம் விலை பவுனுக்கு 160 ரூபாய் குறைந்துள்ளது. பருப்பு விற்பனை மந்தமாக இருப்பதால், விலையில் அதிகளவில் மாற்றம் ஏற்படவில்லை. கடலை எண்ணெய், பாமாயில் வரத்து குறைந்து வருவதால், விலை உயரக்கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளது.

காய்கறி விலை விபரம் குறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது:அதிகளவிலான வெயிலால், காய்கறி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்து வருவதாலும், முகூர்த்த நாட்களாலும் விலை ஏற்றமடைந்து வருகிறது. கடந்த வாரத்தில், 15 ரூபாய் வரை விற்ற கொத்தமல்லி கட்டு, 30 ரூபாயாக உயர்ந்தது; நூல் கோஸ் 35 ரூபாயில் இருந்து 70 ரூபாய்; 17ல் இருந்து 22 ரூபாய் முட்டைகோஸ்; இரண்டு ரூபாய் அதிகரித்து 12 ரூபாய்க்கு பெரிய வெங்காயம் விற்கிறது.தக்காளி கிலோ 24 ரூபாய்; கத்தரி 16; உருளை 20; சேனை 32; பச்சை மிளகாய் உருண்டை 46, சம்பா 35; பாகல் 25; புடலை 18; அவரை 45; காலிபிளவர் 30; அரசாணி மற்றும் பூசணி 20; கேரட் மற்றும் பீன்ஸ் 36 முதல் 40 வரை; பீட்ரூட் 26 முதல் 28 வரை; முள்ளங்கி 18; சின்ன வெங்காயம் 15; கீரை வகை கட்டுகள் இரண்டு ரூபாய்; கறிவேப்பிலை கிலோ 25 ரூபாய்க்கு விற்கிறது, என்றார்.

மல்லிகை வரத்து அதிகம்: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில், "மல்லிகை வரத்து அதிகமாக இருப்பதால், விலை ஏற்றமில்லை. முகூர்த்தங்களை முன்னிட்டு வரும் சனி, ஞாயிறுகளில் விலை உயருமென

எதிர்பார்க்கப்படுகிறது. சம்பங்கி கிலோ 160; மல்லிகை 100; கனகாம்பரம் 160; அரளி 50; பட்டுப்பூ 50; முல்லை பூ 140; மாலை பெரியது 200, சிறியது 50 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

முட்டைக்கு ஏழு காசு உயர்வு: முட்டை வியாபாரி கணேஷ் கூறுகையில்,"முட்டை கோழி எண்ணிக்கை குறைந்துள்ளதால், உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது; வரத்து குறைந்துள்ளதால், விலை ஏற்றம் தொடர்கிறது. வெளிமாநிலங்களில் முட்டையின் தேவை அதிகரித்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் ஏழு காசுகள் வரை விலை அதிகரித்துள்ளது. கொள்முதல் விலையில் முட்டை ஒன்று 2.60 ரூபாயில் இருந்து 2.67 ரூபாய்; மொத்த விற்பனையில் 2.74; சில்லரை விற்பனையில் 3.00 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

தங்கம் விலை சரிவு: தங்க நகை வியாபாரிகள் சங்க செயலாளர் விஜயராகவன் கூறுகையில்,"அட்சய திருதியை முடிந்த, இரு நாட்களுக்குள் கிராமுக்கு 15 ரூபாய் அதிகரித்தது; 20 ரூபாய் வரை குறைந்துள்ளது.கடந்த ஒரு வாரமாக, தங்கம் விலையில் அதிக மாற்றம் ஏற்படவில்லை. கடந்த புதனன்று கிராம் 1,720 ரூபாய்க்கு விற்பனையானது. அதே விலை அட்சய திருதியை வரை நீடித்தது. கடந்த திங்களன்று 15 ரூபாய் அதிகரித்து, இன்று (நேற்று) 20 ரூபாய் குறைந்துவிட்டது. கிராம் 1,715 ரூபாய், பவுன் 13,720 ரூபாய்க்கு விற்றது. பவுனுக்கு 160 ரூபாய் வரை குறைந்துள்ளது. வெள்ளி ஒரு கிராம் 31.00 ரூபாய்க்கு விற்கப்படுகிறது," என்றார்.

பருப்பு விற்பனை மந்தம்: தினசரி மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், "சர்க்கரை கிலோ 30 ரூபாய், துவரம் பருப்பு 66 முதல் 76 வரை; பாசிப்பருப்பு 88 முதல் 92 வரை; உருட்டு உளுந்து 70 முதல் 76 வரை; கருப்பு உளுந்து 66; கொள்ளு 28; தட்டை பயறு 44; சுண்டல் கடலை 34; பச்சைப்பயறு 75 ரூபாய்க்கு விற்கிறது. விற்பனை மந்தமாக இருப்பதால், விலையில் அதிகளவில் மாற்றம் ஏற்படவில்லை," என்றார்.

சமையல் ஆயில் விலை அதிகரிக்கும்: சமையல் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், "கடலை எண்ணெய், பாமாயில் வரத்து குறைந்து வருவதால், விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. ஓரிரு நாட்களில் எண்ணெய் விலையில் மாற்றம் ஏற்படும்."இன்று (நேற்று) கடந்த வாரத்தின் விலை அளவே நீடிக்கிறது. நல்லெண்ணெய் கிலோ 89 ரூபாய்; சூரியகாந்தி எண்ணெய் 58; ரீபன்ட் ஆயில் 84; கடலை எண்ணெய் 74; தேங்காய் எண்ணெய் 60; விளக்கெண்ணெய் 80;  பாமாயில் 44; நெய் 280 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

கறிக்கோழி விலை சரிவு:பல்லடத்தில் உள்ள 'பிராய்லர் கோர்டினேசன் கமிட்டி' (பி.சி.சி.,) தினமும் பண்ணை கொள்முதல் விலையை நிர்ணயிக்கிறது. மீன்கள் இனப்பெருக்க காலத்தை முன்னிட்டு, கடல்களில் விசைபடகுகள் மூலம் மீன் பிடிக்க அரசு தடை விதித்துள்ளது. இதனால், மீன் வரத்து குறைந்துள்ளதால், கறிக்கோழி நுகர்வு வழக்கத்தைவிட 35 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.நுகர்வு அதிகரிப்பால் பண்ணை கொள்முதல் விலை அதிகரித்து வருகிறது. ஐந்து நாட்களுக்கு முன் கிலோ 66 ரூபாயாக உயர்ந்தது. தற்போது, கிலோவுக்கு மூன்று ரூபாய் பண்ணை கொள்முதல் விலை சரிந்து, 63 ரூபாயாக உள்ளது. கறிக்கோழி நுகர்வில் ஏற்பட்ட மந்தநிலை காரணமாக, விலையில் சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது என பண்ணையாளர்கள் தெரித்தனர்.

150 மூட்டை வரமிளகாய் வரத்து அதிகம்

திருப்பூர் : திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு, கடந்த வாரத்தை விட, 150 மூட்டை வரமிளகாய் அதிகமாக நேற்று விற்பனைக்கு வந்திருந்தது.ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ஆறுமுகராஜன் கூறியதாவது: கடந்த வார விலையில் மாற்றமின்றி தானியங்கள் விற்பனையாயின. சோளம் 150 மூட்டை; கம்பு 15; ராகி 10 மூட்டை வந்தது. கடந்த வாரத்தை விட, 150 மூட்டை வரமிளகாய் அதிகரித்து, 270 மூட்டைகள் வந்திருந்தன. சோளம்

குவிண்டால் 1,000 முதல் 3,000 வரை; கம்பு 1,000 முதல் 1,300 வரை; ராகி 950 முதல் 1,050 வரை; வர மிளகாய் 4,500 முதல் 5,500 ரூபாய் வரை விற்பனையானது, என்றார்.

---

**நவீன தொழில்நுட்பம்**

மே 18,2010,16:18 IST



**ஏலத்தோட்ட பராமரிப்பு:** போதிய நிழல் இல்லாத இடங்களில் சந்தன வேம்பு, கருணா, பலா போன்றநிழல்தரும் மரக்கன்றுகளை நடவேண்டும். மே கடைசியில் அல்லது ஜூன் முற்பகுதியில் போதுமான கோடைமழை கிடைத்தவுடன் ஏல நடவுப்பணியினை மேற்கொள்ள வேண்டும். மேகமூட்டத்துடன் கூடிய சாரல் மழை நாட்களில் ஏலத்தினை நடவு செய்வது வேர்பிடிப்பதற்கு மிகவும் நல்லது. நாற்றுகளை நடவு செய்தபின் காற்றில் அசையாதவாறு குச்சி நட்டு அதனுடன் நாற்றுகளுக்கு சேதம் ஏற்படாத வண்ணம் கட்டிவிட வேண்டும். நாற்றின் தூர்ப்பகுதியில் போதுமான அளவில் காய்ந்த இலை, தழை மற்றும் களை எடுத்த செடி களைக்கொண்டு மூடாக்கு இடவேண்டும். தண்ணீர் தேங்கும் இடங்களில் போதுமான வடிகால் வசதி அமைக்க வேண்டும்.

நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் மே கடைசியில் அல்லது ஜூன் முற்பகுதியில் போதுமான மழை கிடைத்தபின் முதல் தவணை உரமிடவேண்டும். ஒரு எக்டருக்கு 90 கிலோ யூரியா, 207 கிலோ ராக் பாஸ்பேட் மற்றும் 137 கிலோ பொட்டாஷ் என்ற அளவில் இடவேண்டும். இது ஒரு வருடத்திற்கு ஒரு எக்டருக்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவான 25 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து மற்றும் 250 கிலோ சாம்பல் சத்தின் மூன்றில் ஒரு பகுதியாகும்.

மானாவாரிப் பகுதியில் முதல் தவணையாக ஒரு எக்டருக்கு 81 கிலோ யூரியா, 187 கிலோ முசோரிபாஸ் மற்றும் 125 கிலோ பொட்டாஷ் என்ற அளவில் இடவேண்டும். இது ஒரு வருடத்திற்கு ஒரு எக்டருக்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவான 75 கிலோ தழைச்சத்து, 75 கிலோ மணிச்சத்து மற்றும் 150 கிலோ சாம்பல் சத்தின் இரண்டில் ஒரு பகுதியாகும்.

ரசாயன உரமிடும்பொழுது ஒரு செடிக்கு 5 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்டு, 25 கிலோ நன்கு மக்கிய கோழி எரு, 1-2 கிலோ வேப்பம் புண்ணாக்கு என்ற அளவில் கலந்து செடியின் தூர்ப் பகுதியிலிருந்து 30-40 செ.மீ. தள்ளி செடியினைச் சுற்றி 20 செ.மீ. அகலத்தில் வட்ட வடிவில் சிறு குழி எடுத்து இடவேண்டும்.

இளஞ்செடிகளுக்கு ஒரு வருடத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவில் 3ல் ஒரு பங்கினை முதலாவது வருடத்திலும், 3ல் இரண்டு பங்கினை 2வது வருடத்திலும் இடவேண்டும். 3வது வருடம் முதல் பரிந்துரைக்கப்பட்ட முழு அளவினையும் இடவேண்டும்.

ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்தில் ஏலத்தட்டையின் பச்சையாக உள்ள இலை உறையை அகற்றாமல் காய்ந்த இலைகளை மட்டும் கவாத்து செய்ய வேண்டும். குயினால்பாஸ் பூச்சிக்கொல்லியை 100 லிட்டர் தண்ணீர் 200 மிலி என்ற அளவில் கலந்து தண்டு துளைப்பானின் அந்து பூச்சி வெளிவரும் சமயத்தில் தெளிக்க வேண்டும்.
அழுகல் மற்றும் கிழங்கு அழுகல் நோய் அதிகமுள்ள இடங்களில் பயிர் சுகாதார முறைகளை கடைபிடித்து பூசணக்கொல்லி மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளைப் பயன்படுத்துவது போன்ற ஒருங்கிணைந்த நோய் நிர்வா முறைகளைக் கடைபிடிக்கலாம். 0.2 சதம் காப்பர் ஆக்சிகுளோரைடு கரைசலை (200 கிராம்/ 100 லிட்டர் தண்ணீர்) தூர்ப்பகுதியில் ஊற்றுவதுடன் ஒரு சத போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். 5 நாட்கள் கழித்து டிரைகோடெர்மாவை தனியாகவோ அல்லது சூடோமோனாசுடன் கலந்தோ தூர்ப்பகுதியில் இடவேண்டும். 0.4 சத அகோமின் கரைசலைத் (400 மில்லி/100 லிட்டர் தண்ணீர்) தெளிக்க வேண்டும். (தகவல்: ஸ்பைசஸ் இந்தியா, ஏப்ரல் 2010)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

**மிளகாய் சாகுபடியில் புதிய இனங்கள்**

மே 18,2010,16:16 IST



தற்போது பாப்ரிக்கா இனத்தைச் சேர்ந்த சுவீட் பனானா மற்றும் ஹங்கேரியன் எல்லோ வாக்ஸ் என்ற மிளகாய் இனங்கள் பெரிய உணவு விடுதிகளில் அதிகமாக சைனீஸ் மற்றும் தாய் உணவு தயாரிப்பதற்கு அதிகளவு உபயோகப்படுத்தப்படுகின்றன. தற்போது இந்த மிளகாய் தமிழகத்தில் சிறிய உணவு விடுதிகளில் பஜ்ஜி மிளகாய் என்று உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டு ரகங்களில் சாகுபடி பட்டம் மற்றும் இதர அம்சங்களை ஆராயலாம்.

1. ஹங்கேரியன் எல்லோ வாக்ஸ் என்று அழைக்கப்படும் இந்த ரகம் நவம்பர் மாதத்தில் சாகுபடியை துவங்கி ஏப்ரல் வரை சாகுபடி செய்யலாம். வெப்பநிலை 35-37 டிகிரி ஞ் வரை நன்கு வளர்ந்து மகசூல் கொடுக்க வல்லது. இந்த ரகத்தின் செடி 75-80 செ.மீ. உயரம்வரை வளரக் கூடியது. இதன் காய்கள் 15 - 16 செ.மீ. நீளமும் 3 செ.மீ. கனமும் உடையது. இந்த ரகத்தின் காய்களின் தோல் கனமாகவும் மேல்புறம் பார்த்தபடி காய்க்கக் கூடியது. காய்கள் பார்ப்பதற்கு மெழுகால் செய்ததுபோல் காட்சிஅளிக்கும். மேலும் இந்த காய்களில் காரம் குறைவாக இருக்கும்.

2. ஸ்வீட் பனானா என்று அழைக்கப்படும் இந்த ரகமும் பாப்ரிக்கா இனத்தை சேர்ந்தது ஆகும். செடிகளின் உயரம் (75-80 செ.மீ.) இருக்கும். இந்த ரகமும் குளிர் மாதங்களில் சாகுபடி செய்ய முடியும். (நவம்பர்-ஏப்ரல்). இந்த ரகத்தின் காய்கள் பார்ப்பதற்கு வெளிறிய பசுமை நிறத்தை கொண்டதாக இருக்கும். காய்கள் நீளமாகவும் சாதாரண ரகங்களைப் போல்

மிளகாயின் நுனிபாகம் பூமியை நோக்கி இருக்கும்படி காய்க்கும். இந்த ரகத்தின் காய்களின் தோல் மெல்லியதாகவும் காய்கள் காரம் குறைந்ததாகவும் இருக்கும். மேற்கூறிய இரண்டு ரகங்களை பரிசோதனைக்காக தலா 10 சென்ட் பரப்பளவு சாகுபடி செய்யப்பட்டது. அதன் விவரம் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வகைகளும் 29.12.2009 அன்று மேட்டுப்பாத்தி அமைத்து நாற்று விடப்பட்டது. நாற்றின் வயது 45 நாட்கள் இருக்கும்போது இரண்டு ரகங்களையும் 10 சென்ட் பரப்பில் செடிக்கு செடி இரண்டு அடி, வரிசைக்கு வரிசை இரண்டு அடி இடைவெளி இருக்கும்படி நடவு செய்யப்பட்டது. நடவு செய்வதற்கு முன் ஒவ்வொரு 10 சென்ட் பரப்பிற்கும் 600 கிலோ மக்கிய தொழு உரமும் 17:17:17 காம்ப்ளக்ஸ் 25 கிலோவும் இடப்பட்டது. பின் 20 நாட்கள் கழித்து களை எடுக்கப்பட்டது. பின் ஒரு முறை 10 கிலோ யூரியாவும் முதல் காய் அறுவடை செய்தவுடன் 10 கிலோ யூரியாவும் மேலுரமாக இடப்பட்டது. செடி நடவு செய்த 70 நாட்கள் கழித்து காய்கள் அறுவடைக்கு வந்தது. இந்த இரண்டு வகைகளிலும் பூச்சி, வியாதி பாதிப்பு அதிகமாக தென்படவில்லை. ஆனால் காய்கள் பிடிப்பதில் ஹங்கேரியன் எல்லோ வாக்ஸ் ரகங்களில் பிப்ரவரி 20 தேதிக்கு மேல் உஷ்ணம் அதிகரிக்க தோன்றியபின் காய்களின் எண்ணிக்கை மற்றும் காய்களின் நீளம் குறைந்து சிறியதாகிவிட்டது. இவ்வாறு சிறியதாக காய்த்த காய்களை மார்க்கெட்டில் வாங்க மறுத்துவிட்டனர். இதே நாளில் நாற்றுவிட்டு நட்ட மற்றொரு ரகமான சுவீட் பனானா என்ற ரகம் செடிகளில் அதிகமான காய்களுடன் காட்சி அளித்தது. மேலும் உஷ்ணம் அதிகரிப்பினால் காய்களின் நீளத்தில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. வியாபாரிகள் மார்க்கெட்டில் நல்ல விலை கொடுத்து விரும்பி வாங்குகின்றனர்.

**அறுவடை:** ஹங்கேரியன் எல்லோ வாக்ஸ் ரகம் 10 சென்ட் பரப்பில் 450 கிலோ மகசூல் கொடுத்தது. பிப்ரவரி 15 தேதிக்கு மேல் தோன்றும் காய்கள் சிறுத்ததால் மார்க்கெட்டில் வாங்க மறுத்துவிட்டனர்.


**சுவீட் பனானா:** இந்த ரகமும் அதே பரப்பளவு சாகுபடி செய்யப் பட்டது. இந்த ரகத்தின் காய்கள் உஷ்ணம் அதிகரிப்பால் பாதிக்கப் படவில்லை. மார்க்கெட்டிலும் நல்ல விலை கிடைத்தது. இரண்டு ரகத்திலும் சாகுபடி செலவு ஒரே அளவு இருந்தாலும் மகசூல் திறனில் மாறுதல் இருந்தது. இந்த ரகத்தில் மகசூல் 10 சென்ட் பரப்பில் 700 கிலோ கிடைத்தது. இந்த மகசூல் மற்றொரு ரகமான ஹங்கேரியன் எல்லோ வாக்ஸ் ரகத்தைவிட 250 கிலோ கூடுதலாக இருந்தது. மேலும் இந்த ரகத்தில் ஹங்கேரியன் எல்லோ வாக்ஸ் ரகத்தைவிட ரூ.2,475/- கூடுதல் லாபம் கிடைத்தது. சென்னையிலும் அதன் சுற்றுப்புற பகுதிகளிலும் இந்த மிளகாயை குளிர்காலத்தில் விவசாயிகள் சாகுபடி செய்யலாம். விற்பனை பிரச்னை எதுவும் கிடையாது.

**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**மலைவாழையில் பனாமா வாடல்நோய் கட்டுப்பாடு**

மே 18,2010,16:14 IST

மலைவாழை கடல் மட்டத்திலிருந்து 2000 முதல் 5000 அடி வரை உள்ள கீழ்ப்பழநி மலை, சிறுமலை, கொல்லிமலை மற்றும் கல்ராயன்மலை ஆகிய இடங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. கீழ்ப்பழநிமலை மற்றும் சிறுமலை பகுதிகளில் இவ்வாழை வாடல் நோயினால் பெரிதும் பாதிப்படைந்து வருகிறது. இவ்வாழை பல்லாண்டு பயிராக சாகுபடி செய்யப் படுவதால் இந்நோயினால் பெரிதும் சேதம் உண்டாகின்றன. இதற்கு பனாமா வாடல்நோய் என்ற பெயரும் உண்டு.




1. நோய் தாக்கப்பட்டு மடிந்த மரம்; 2. தாக்கப்பட்ட மரத்தின் தண்டுப்பாகம்;
3a & 3b: தாக்கப்பட்ட தண்டின் குறுக்குவெட்டுத் தோற்றம்

இது ஒரு வகை பூசண நோயாகும்.

நோயின் அறிகுறிகள்: இந்நோய் பெரும்பாலும் 5 மாத வயதுடைய வாழை மரங்களைத் தாக்கும். ஆனால் 2-3 மாத வயதுடைய இளம் செடிகளைக்கூட தாக்கக்கூடும். நோயின் முதல் அறிகுறி, தாக்கப்பட்ட மரங்களின் முதிர்ந்த மற்றும் இளம் இலைகளின் காம்புகளில் இளம் மஞ்சள் நிறக்கீற்றுக்கள் நீளவாக்கில் தோன்றும். இதைத் தொடர்ந்து, இலைக்காம்பிலிருந்து முறிந்து தொங்கிவிடும். சில நேரங்களில் இலைகள் நிறம் மாறாமலேயே, காம்பிலிருந்து முறிந்து தொங்கிவிடும். பெரும்பாலும் இளம் குருத்து இலைகளைத்தவிர, மற்ற எல்லா இலைகளும் காம்பிலிருந்து முறிந்து தொங்கிவிடும். குருத்து இலைமட்டும் நேராக நிமிர்ந்து நிற்கும். புதிதாக தோன்றும் இலைகளில் திட்டு திட்டாக மஞ்சள் நிறப்பீடைகளும், சுருக்கங்களும் தென்படும். இலைக் காம்புகளில் மஞ்சள் நிறக்கீற்றுக்கள் தோன்றிய 4-6 வாரங்களில் மரங்கள் முழுவதும் வாடி மடிந்துவிடும். தண்டுப்பாகத்தை மூடியிருக்கும் வெளிப்புறத்து இலை உறைகளில் பெரும்பாலும் நீளவாக்கில் பிளவுகள் தோன்றும்.

**நோய் கட்டுப்பாடு:** நோய் பாதிக்காத வயல்களிலிருந்து நோய் தாக்காத கன்றுகளை நடவுக்குத் தேர்வு செய்ய வேண்டும். மேலும் இந்நோய் தாக்கிய மரங்களிலிருந்து நீரை மற்ற மரங்களுக்கு பாய்ச்சக்கூடாது. தாக்கப்பட்ட மரங்களின் இலைகள், மரத்தின் பாகங்கள் மற்றும் கிழங்குகளில் நோய்க்காரணி நீண்டகாலம் வாழக்கூடுமானால் அவற்றை அவ்வப்போது அகற்றி எரித்துவிட வேண்டும். நோய் தாக்கிய மரங்களை பக்கக் கன்றுகளுடனும், கிழங்குகளுடனும் அகற்றிவிட்டு, அந்தக் குழிகளில் 1.5 கிலோ வீதம் சுண்ணாம்புத்தூளை பரவலாகத் தூவி, சில வாரங்கள் நன்கு ஆறவிட்டு பின்னர் அந்தக் குழிகளில் வேறு கன்றை நடலாம்.

நோய் தாக்கிய நிலத்தில் நீரைத்தேக்கி, சில நாட்கள் வைத்திருந்து, பின்னர் 6 மாத காலம் அந்த நிலத்தில் வாழை பயிரிடாமல், தரிசாக விடுவதன் மூலம் மண்ணில் காணப்படும் பூசண வித்துக்களை அழிக்கலாம். நீர் தேக்கி வைக்கும்போது நிலத்தில் உண்டாகும் அசிட்டிக் அமிலம் போன்ற நச்சுப் பொருட்கள் நோய் காரணியை அழிக்கக் கூடியவை. நோய் தாக்கிய பயிரை மறுதாம்புக்கு விடக்கூடாது. கார்பன்டாசிம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு

கிராம் மருந்து என்ற விகிதத்தில் கலந்து, அந்தக் கலவையுடன் சிறிது சேற்றையும் சேர்த்து கலக்க வேண்டும். நடுவதற்கு முன்னர் வாழைக் கன்றுகளின் கிழங்கு பாகத்தில் காணப்படும் வேர்களை வெட்டி அப்புறப்படுத்திவிட்டு, பின்னர் மருந்துக் கலவையில் கிழங்குபாகத்தை நன்கு நனைக்க வேண்டும். பின்னர் கிழங்கின் மேற்பரப்பில் 5 கிராம் வீதம் கார்போ பியூரான் 3சத குருணையை பரவலாகத் தூவ வேண்டும். இதனால் நூற்புழுக்களின் தாக்குதல், பூசணத்தின் தாக்குதலில் இருந்தும் கன்றுகளை பாதுகாக்க முடியும்.

ஜெலட்டின் மருந்து உறைகளில் 50-75 மி. கிராம் கார்பன்டாசிம் மருந்தை நிரப்பி, தண்டின் அடிப்பாகத்தில், கிழங்கினுள் சுமார் 10 செ.மீ. ஆழத்திற்கு 45 டிகிரி கோணத்தில் சாய்வாக, ஒரு இரும்புக் கம்பியின் மூலம் துவாரம் உண்டாக்கி, அதனுள் மருந்து செலுத்தி, துவாரத்தை பூசணக்கொல்லி மருந்து கலந்த சேறு கொண்டு அடைத்துவிட வேண்டும். காலி மருந்து உறைகள் கிடைக்காவிட்டால் 2 சதம் கார்பன்டாசிம் மருந்து கரைசலை கிழங்கினுள் சுமார் 10 செ.மீ. ஆழத்தில் 45 டிகிரி கோணத்தில் சாய்வாக, ஒரு துவாரம் செய்து, அதனுள் 3 மி.லி. என்ற விகிதத்தில் ஊற்றி, பின்னர் தாமிர ஆக்சி குளோரைட் பூசணக்கொல்லி கலந்த சேறு கொண்டு துவாரத்தை அடைத்துவிட வேண்டும்.

**ம.கண்ணன் மற்றும் மு.ஆனந்தன்,தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை.**

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சிக்கான ஏற்பாடுகள் தீவிரம்*

*குன்னூர், மே.19–*

*குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக் கண்காட்சிக்கான ஏற் பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது.*

*பழக்கண்காட்சி*

*நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் களை கட்டி உள்ளது. இதனையொட்டி பல்வேறு விழாக்கள் ஊட்டி யில் நடைபெற்றன. இதன் தொடர்ச்சியாக குன்னூர் சிம்ஸ் பூங்காவில் வருகிற 22–ந் தேதி பழக்கண்காட்சி தொடங்குகிறது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.*

*இது குறித்து தோட்டக் கலை இணை இயக்குனர் இஸ்ரவேல் நிருபர்களிடம் கூறியதாவது:–*

*வருகிற 22, 23–ந் தேதி களில் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 52–வது பழக்கண்காட்சி நடைபெற உள்ளது. இந்த பழக்கண்காட்சியில் தோட்டக்கலை துறை சார்பாக 7 அரங்குகள் அமைக்கப்பட உள்ளது. பழக்கண்காட்சியில் சிறப்பு அம்சமாக 12 அடி உயரத்தில் ஆயிரம் அண்ணாச்சி பழங் களை கொண்டு ராட்சத அண்ணாச்சி பழமும், 1250 சாத்துக்குடி, ஆரஞ்சு பழங் களை கொண்டு ராட்சத சாத்துக்குடி பழ அலங்காரம் உரு வாக்கப்பட உள்ளது.*

*பூங்கா முழுவதும் மாம் பழங்களினால் தோரணங்கள் அமைக் கப்பட உள்ளது. பூங்கா நுழைவு வாயிலில் 12 அடி உயரத்தில் பழங்களினால் ஆன அலங்கார வளைவு அமைக்கப்படுகிறது.*

*பழக்கண்காட்சிக்கு வாக னங்கள் மூலம் சுற்றுலா பயணிகள் வருவார்கள். இவர் களின் வாகனங்களை நிறுத்தி வைக்க பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக சிம்ஸ் பூங்கா அருகே உள்ள தோட்டக்கலை துறைக்கு சொந்தமான இடத்தில் அரை ஏக்கர் பரப்பளவு ஒதுக் கப்பட்டு உள்ளது.*

இந்த இடம் பொக்லைன் எந்திரம் மூலம் தயார்படுத்தப்பட்டு வருகிறது.
கட்டணம்

இங்கு வாகனங்கள் நிறுத்த கட்டணமாக இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.10, கார் போன்ற வாகனங்களுக்கு ரூ.20, வேன்களுக்கு ரூ.30, பஸ் களுக்கு ரூ.50 தோட்டக்கலை துறை மூலம் வசூலிக்கப்பட உள்ளது.

3 மணி நேரத்துக்குள் வாகனங்கள் திருப்பி எடுத்து செல்ல வேண்டும்.

மேலும் தற்போது சிம்ஸ் பூங்காவில் நடைபாதைகள், தடுப்பு வேலிகள் அமைக்கப் பட்டு வருகிறது.

வருகிற 5 ஆண்டுகளுக்குள் சிம்ஸ் பூங்காவில் உள்ள படகு சவாரி செய்வதற்கான இடம் விரிவுப்படுத்தப்படும். ரோப் கார் அமைப்பதற்கு ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

இதற்கான நிதி மாநில அரசி டம் கேட்கப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்து மகிழ மேலும் புதியதாக 5 படகுகள் வாங்கப்பட உள்ளது.

மேலும் குன்னூரில் 20 ஏக்கர் இடம் கிடைத்தால் அங்கு புதிய பூங்கா உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.